Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 05 புதன்கிழமை (22-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:328



பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இணைப்பாளர் கரீனா எரிக்ஷன் ஆகியோர்....

பின்லாந்து வெளிவிவகார அமைச்சின் ஆசியப் பிராந்திய தூதர் மிக்கோ பைகாலா, அரசியற்றுறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் நேற்று சந்தித்த வேளையில்....



# தெற்கில் ஒளிந்துள்ள சக்திகளுக்கு நிமலராஜன் கொலையுடன் தொடர்பு!

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்22

**ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை ஓர் அரசியல் படுகொலையாகும். அரசியல் வேறுபாடுகளே இக்கொலைக்குக் காரணம். தென்பகுதியில் இயங்கும் மறைவு சக்திகளுக்கும் இக்கொலையுடன் தொடர்புண்டு. - இவ்வாறு கருத்துக் கூறியிருக்கிறார் இராணுவத்தின் வடபகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.**

குடாநாட்டில் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊடகவியலாளர்கள், கடமையின் போது படையினரால் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர், கோவில் வீதியிலுள்ள அதன் அலுவலகத்தில் சந்திப்பொன்று நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

அந்தச் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே வடபகுதி கட்டளைத் தளபதி இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலை வழக்கு: தன்னிச்சையான வாக்குமூலம் வழங்க சந்தேகநபர் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பாக திருகோணமலையில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 5ஆவது சந்தேகநபரான உதயபாலன் என்பவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச்சந்தேகநபர் நிமலராஜன் கொலை தொடர்பாக நீதவானிடம் தன்னிச்சையான வாக்குமூலம் ஒன்றை அளிக்க விரும்புவதாக குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி ரஞ்சித் டீ சில்வா முன்னர் யாழ். நீதிமன்றில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து அவ்வாறான வாக்குமூலம் அளிக்க விரும்பினால் அதனைத் தெரிவிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதித் தளபதி பொன்சேகா 'உதயன்' பத்திரிகை மீது பாய்ச்சல்

"இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் உதயன் செய்திகளை திரித்து வெளியிடுகின்றான்."

- இவ்வாறு குற்றம் சுமத்துகின்றார் வடபகுதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

நேற்று வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் நடந்த சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஊடகவியலாளர்களைத் தாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏதும் படையினருக்கு கிடையாது. அதேசமயம் ஊடகவியலாளர்களின் தொழிற்பாடுகளோடு இணங்கிப்போகும் அவசியமும் படையினருக்கு இல்லை.

உள்ளூர் ஊடகங்கள் குறித்து நாம் அதிருப்தியுற்றிருக்கின்றோம். உண்மையான செய்திகளை அவை திரித்து வெளியிடுவதே இதற்குக் காரணம்.

குடாநாட்டிலிருந்து வெளிவரும் பிரபலமான 'உதயன்' பத்திரிகையும் மற்றும் சிலவும் இவ்வாறு செய்திகளை திரித்து வெளியிடுகின்றன.

'உதயன்' எப்போதுமே சரியான

(2ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் பற்றி இலங்கை-இந்தியப் பிரதமர்கள் பேச்சு

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை இருநாட்டுப் பிரதமர்களும் மிக விரைவில் மேற்கொள்வார்கள் என இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பை அடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா தற்போது வழங்கிவரும் பயிற்சிகள், கருவிகள் ஆகியவை பற்றி இரு நாட்டுப் பிரதமர்களும் விவாதித்தனர்.

இலங்கையின் இறையாண்மை, பூகோள ஒற்றுமை, பாதுகாப்பு ஆகிய விவகாரங்களை இந்தியா தொடர்ந்து கூர்மையாக அவதானிக்கும்.

இலங்கையில் தற்போது தடைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி தொடருமானால் பின்லாந்து அதிக நிதி வழங்கத் தயார்

### அந்நாட்டுப் பிரதிநிதி தெரிவிப்பு

கிளிநொச்சி,ஒக்.22

இலங்கையில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடரப்படவேண்டும். வடக்கு-கிழக்கை புனரமைக்க கூடுதல் நிதியை வழங்க பின்லாந்து தயாராகவிருக்கின்றது.

அந்தநாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஆசிய பிராந்தியத் தூதர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுடன் வரைவுபற்றி தமிழ்ச்செல்வன் பேச்சு

### முதல் சந்திப்பு இன்று கூட்டமைப்பினருடன்

கிளிநொச்சி,ஒக்.22

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள வரைவு குறித்து தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் மலையகக் கட்சிகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆராயவுள்ளார்.

இதில் முதலாவது சந்திப்பு இன்று கிளிநொச்சியில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெறுகின்றது.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனுடனான சந்திப்பு நாளையும்-

இ.தொ.கா.தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானுடனான சந்திப்பு எதிர்வரும் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

இந்தச் சந்திப்புக்களை அடுத்து எதிர்வரும் 31 ஆம் திகதி நோர்வே தரப்பு மூலம் வரைவை அரசிடம் விடுதலைப் புலிகள் கையளிக்க உள்ளனர். (ஒ-3)

*(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)*

சிறுக சிறுக

பிள்ளைகளுக்காக
குடும்பத்துக்காக
நாட்டுக்காக
நமக்காக
சில்லறைகளானாலும்
சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மாதமாகும். இன்றே சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து ஒவ்வொரு சதத்தையும் சேமிக்க பழகுங்கள். இத்தினத்தில் எமது வங்கி க.பொ.த. உயர்தரத்தில் சிறப்பாகச் சித்தி எய்திய 200 வசதி குறைந்த மாணவர்களுக்கு பணப் பரிசுகளை வழங்கவுள்ளது. மாவட்ட அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியிலும் பயிலும் (விஞ்ஞானம்/கணிதம்/கலை/வர்த்தகம்) இருவருக்கு இப் பரிசுகள் வழங்கப்படும். இது தேசத்தின் நலனுக்கான எமது பங்களிப்பாகும்.

NSB

PHOENIX O&M

# பேச்சு இனப்பிரச்சினைத் தீர்வுக்குத்தான்; அதில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு அவசியம்!

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வற்புறுத்து

கொழும்பு,ஒக்.22

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சு நடந்ததும், நடக்கப்போவதும் போர்நிறுத்தத்துக்காக அல்ல; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகவே. இனப் பிரச்சினையால் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் முஸ்லிம் சமூகம் தனித் தரப்பாகப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டியது அவசியம்; அது தவிர்க்க முடியாதது என்று நேற்று நாடாளுமன்றத்தில் வற்புறுத்தினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக கலந்துகொள்ளவேண்டும் என்று கோரும் பிரேரணையை நேற்று ஒத்திவைப்பு வேளையின் போது முன்மொழிந்து பேசுகையிலேயே ஹக்கீம் மேற்கண்டவாறு வற்புறுத்தினார். அவருடைய பிரேரணையை அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் வழிமொழிந்து பேசினார்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்துகொள்வதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் முஸ்லிம் காங்கிரஸுடன் செய்து கொண்டுள்ள தனித்தனி ஒப்பந்தங்களின் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளனர். சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடும் அதுதான். ஆகவே அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேசுகையில் தேவை ஏற்படும்போது என்று இல்லாமல் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்போதே முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குகொள்ளவேண்டும் என்று ஹக்கீம் கூறினார்.

அமைச்சர் ஹக்கீம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குகொள்வதன் அவசியத்தை அரசுக்கும், புலிகளுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்துக்கும் வலியுறுத்தவே இந்த ஒத்திவைப்பு வேளை விவாதத்தைக் கொண்டு வந்தோம்.

2002 ஏப்ரல் 13 ஆம் திகதி புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். பின்னர் 2002 செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதை லண்டனில் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேபோல், முஸ்லிம்கள் தனித் தரப்பாக பங்குபற்றுவதன் அவசியத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க் மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டிலும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதேகூற்றை வலியுறுத்தியுள்ளார்.

தேவையேற்படும்போதுதான் முஸ்லிம்கள் சமாதானப் பேச்சில் தனித்தரப்பாக பங்குபற்றலாம் என்று கூறுவதில் அர்த்தமில்லை. எனவே அடுத்தகட்ட பேச்சு ஆரம்பிக்கும் போதே முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குகொள்ள வழிசெய்யப்பட வேண்டும்

பேச்சு நடைபெறுவது இனப்போரை நிறுத்துவதற்காக அல்ல; இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காகவே என்றே முஸ்லிம் காங்கிரஸ் நம்புகிறது. இனப்போரை நிறுத்துவதற்கான பேச்சாக இருப்பின் நோர்வேயின் அனுசரணையுடனல்ல, உலகில் வல்லமையுள்ள இராணுவ நிபுணர்களின் அனுசரணையுடன் இலங்கை முப்படை



களின் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும்தான் பேசியிருக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. புலிகளின் அரசியல் ஆலோசகர்களும் அரசின் அரசியல் தலைவர்களும் நோர்வேயின் அனுசரணையுடன் பேசுகிறார்கள். எனவே, நிச்சயமாக நடைபெறுவது இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுத்தான். இப்பேச்சில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குபற்றியே ஆகவேண்டும் இது முஸ்லிம்களுக்கு இருக்கும் பரிபூரண உரிமையாகும். இனப்போருக்கு தீர்வைக் காணும் பேச்சுவார்த்தையாக இருக்குமானால் முஸ்லிம்கள் போரில் நேரடியாக ஈடுபடாதவர்கள் என்ற வகையில் மூன்றாம் தரப்பு தேவை முஸ்லிம்களுக்கு ஏற்படாமல் போகலாம்.

தனது பக்க ஆலோசனைகளை புலிகளுக்கு அரசு அனுப்பியபோதே முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குகொள்ளவேண்டியதையும் அரசு வலியுறுத்தியுள்ளது. மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள் பேச்சுக்களில் பங்குபற்றவேண்டும் என்பது ஒட்டுமொத்தமாக முஸ்லிம் சமூகத்தின் ஏகோபித்த முடிவும் விருப்பமுமாகும்.

எமது இக்கோரிக்கை, பேச்சு தற்போது இடைநிறுத்தப்பட்ட பின்னர் முன்வைக்கப்பட்டதல்ல. தாய்லாந்தில் முதற்சுற்றுப்பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னரே முஸ்லிம் காங்கிரஸினால் அது வலியுறுத்தப்பட்டது.

முன்னைய அரசில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகுவதற்கு தனித்தரப்புப் பிரச்சினையே காரணம்.

அன்று முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த ஒன்பது பேர் ஜனாதிபதி குமாரதுங்கவை நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

அரசையும், புலிகளையும் பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் பெரும் முயற்சிகளைச் செய்து கொண்டிருந்த காலம் அது. நோர்வேயை அனுசரணையாளராகச் செயற்படுமாறு ஜனாதிபதி குமாரதுங்க அழைப்பு விடுத்திருந்த ஆரம்ப காலம்.

அன்று நடந்த சந்திப்பில் பேச்சு ஒன்று இடம்பெற்றால் அதில் முஸ்லிம்கள் மூன்றாந் தரப்பாக கலந்து கொள்ளவேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து தர வேண்டும் என்றும் நாங்கள் கோரிக்கை விடுத்தோம். ஆனால், எங்களது கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்தார். அது மட்டுமல்லாமல் தாங்கள் புலிகளுடன் பேசிவிட்டு வந்து அங்கு பேசியவை குறித்துப் பின்னர் எங்களுடனும், ஈ.பி.டி.பியினருடனும் கலந்துரையாடுவார்கள் என்றும், பின்னர் நாங்கள் கூறியவற்றைப் புலிகளுடன் பேச்சு மேசையில் ஆராய்வோம் என்று ஜனாதிபதி கூறினார்.

முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்குவதை அவர் மறுத்தது மட்டுமல்லாமல் முஸ்லிம் இனத்தின் அரசியல் அந்தஸ்தை ஒரு கட்சியின் அந்தஸ்துக்கு குறைத்து மதிப்பிட்டார். இதனால்தான் இலங்கையில் புதிய அரசு உருவானது. இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கு புதிய உதவேகம் பிறந்தது.

- இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ)

# நேற்றைய அடையாள வேலைநிறுத்தம் திருமலை, மட்டக்களப்பில் பிசுபிசுப்பு!

திருகோணமலை,ஒக்.22

சம்பள உயர்வு, தொழிலாளர் உரிமை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று திருகோணமலையில் அரசசேவை ஒருங்கிணைந்த பொது ஊழியர் சங்கம் நடத்திய ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் வெற்றியளிக்கவில்லை.

அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எந்த அலுவலகமும் மூடியிருக்கவில்லை. அலுவல்கள் வழமைபோல நடைபெற்றன. சிங்களப் பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் இயங்கின. வாகனப் போக்குவரத்தோ அல்லது பொதுமக்களின் நடமாட்டமோ குறைந்திருக்கவில்லை.

பல தொழிற்சங்கங்கள் இந்த அடையாள வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# வடபகுதித் தளபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கத்தை மக்களுக்கு காட்டுவதில்லை. ஒரு பக்கத்தரப்பை-உண்மையை - செய்தியாக்குவதன் மூலம் இராணுவத்துக்கு மக்கள் மத்தியில் அபகீர்த்தியை-தப்பபிப்பிராயத்தை அது உருவாக்குகின்றது.

இப்போக்கு காரணமாக ஊடகத்துறையினரால் பாதுகாப்புப்படையினரின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

இங்கு உண்மை என்பது எப்போதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது என்பதே எனது கருத்து.

எனினும், இத்தகைய ஊடகங்களை நான் முற்றாக குற்றம் சுமத்த விரும்பவில்லை. முழுமையான செய்திகளை வெளியிட முடியாத அழுத்தங்களுக்கு அவை உட்பட்டிருக்கின்றன. அதற்காக அவற்றுக்கும் சில அளவுகளை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதே நேரம் மறுபுறத்தே இத்தகைய செய்திகளால் படையினர் பாதிப்புறுவதையும் நாம் கவனிக்கவேண்டும்.

அண்மைக்காலத்தில் இவ்வாறு திரித்துக் கூறப்பட்ட பல செய்திகளை என்னால் குறிப்பிட முடியும்.

ஊடகவியலாளர்கள் அண்மையில் தாக்கப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவங்கள் அனைத்தும் வன்செயல்கள் இடம்பெற்ற பகுதிகளிலேயே நடந்துள்ளன.

சில ஊடகவியலாளர்கள் அடையாளம் காணப்படாமலோ அல்லது நெரிசலின்போதோ தாக்கப்பட்டிருக்கலாம். சில சமயம் அவர்கள் வேண்டுமென்றே தாக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், இவை அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்துக்களை அடுத்து வன்முறையில் ஈடுபட்ட கும்பல்கள் மீது படையினர் சிறு அளவில் மேற்கொண்ட பலப்பிரயோகத்தின் போதே நிகழ்ந்திருக்கின்றன.

வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்காக 'அடித்தனர்' எனக் கூறப்படும் வார்த்தைப்பிரயோகம் தவறு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறு அளவிலான பலப்பிரயோகத்தை மட்டுமே மேற்கொள்கின்றோம். படையினர் தடியடிப்பிரயோகம் செய்வதை ஊடகங்கள் 'தாக்குதல்' என்கின்றன. கூடியிருந்த கும்பல், படையினர் மீது பல பொருள்களையும் வீசித் தாக்குகின்றன. ஆனால் ஊடகங்கள் இது குறித்து ஏதும் கூறுவதில்லை.

சம்பவ இடங்களில் புகைப்படம் பிடிக்க நாம் அனுமதிப்பதில்லை என்பது உண்மையே. அப்படிப் புகைப்படம் பிடிப்பதற்கு அனுமதிக்க நாம் தயாரில்லை.அங்கு பணியாற்றும் படையினரைக் காப்பதற்காகவே இந்த முடிவு.

எனினும் ஊடகவியலாளர்கள் அப்பகுதியில் செய்தி சேகரிக்கும் உரிமையை நாம் மட்டுப்படுத்த முடியாது. அவர்கள் சம்பவ இடத்தில் குழுவாக ஒன்று திரண்டு, தாம் தரித்திருக்கும் இடம் தொடர்பாக படையினருக்கு தகவல் தந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும்.

அத்துடன் கண்காணிப்பாளர்களுடன் ஊடகவியலாளர்கள் நிற்பது பாதுகாப்பானது என்றார் தளபதி பொன்சேகா.

### ஆசிரியர் குறிப்பு:

01. உதயனின் செய்திகளில் தவறு, திரிப்பு, மறைப்பு இருப்பதாக வடபகுதித் தளபதி கருதினால் உடனுக்குடன் அவர் அவற்றை மறுக்கலாம்; மறுத்திருக்கலாம். மூலச் செய்திக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை மறுப்புகளுக்கும் வழங்கும் பத்திரிகை தர்மத்தை 'உதயன்' என்றுமே கைவிட்டதில்லை. ஆனால், இரண்டு விடயங்கள், ஒன்று - அத்தகைய மறுப்புகளில் உண்மையும் ஆதாரமும் இருக்க வேண்டும். இரண்டு - மறுப்புகள் தொடர்பாக உதயன் பக்கத்தில் இருக்கும் விளக்கங்களையும் உதயன் தருவான்.

முன்னர் பல தடவைகள் இத்தகைய மறுப்புகளை இராணுவம் அனுப்பியுள்ளது. இராணுவத்தரப்பின் மறுப்புகளை உரிய முக்கியத்துவம் அளித்து உதயன் பிரசுரித்துள்ளான். இது குறித்து இராணுவப் பேச்சாளர் அலுவலகத்தில் உரிய தகவல்களை வடபகுதித் தளபதி பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும் அண்மைக் காலத்தில் இத்தகைய செய்திகள் எவற்றுக்கும் படைத்தரப்பிலிருந்து மறுப்போ, ஆட்சேபமோ நேற்று வரை வரவில்லை.

02. களமுனையில் உள்ள படையினர் கொடுக்கும் தகவல்களை படைத்தரப்பின் நிலைப்பாட்டுக்கு அமைய அதன் தலைமைப்பீடம் வகுத்து அறிக்கையாக்கிக்கொள்கின்றது. அதே போன்று களமுனைச் செய்தியாளர்கள் வழங்கும் தகவல்களை தனது மக்களின் கருத்துக்கு அமைய ஊடகங்கள் செய்தியாக்குகின்றன. படைத்தரப்பு விரும்பும் அறிக்கைகளாக பத்திரிகைகளின் செய்திகள் அமைய வேண்டும் என்று யாரேனும் எதிர்பார்த்தால், அதை உதயனால் நிறைவு செய்யமுடியாது என்பதே உண்மை.

03. தென்னிலங்கையிலும் கும்பல்களைக் கலைக்க கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் எல்லாம் நடக்கின்றன. ஓரிரு சந்தர்ப்பங்களில் தவிர, மற்றையவற்றில் எல்லாம் செய்தியாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்களைத் தவிர்த்து - அவர்கள் பாதிப்புறாதவாறு - நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவே! அது வடக்கில் மட்டும் பொருந்தி வராமல் போவதேன்?

04. சம்பவ இடங்களில் செய்தியாளர்கள் புகைப்படம் எடுக்க அனுமதிக்க முடியாது என்ற இறுக்கத் தொனியில் வடபகுதி கட்டளைத் தளபதி கூறியிருக்கின்றார். அவசர காலச் சட்டம் கூட நடைமுறையில் இல்லாத நிலையில் - அவர் கூறியிருக்கும் இக்கருத்து, பத்திரிகைச் சுதந்திரத்தில் சீருடையினர் அடாவடியாகத் தலையிடுவதை நிரூபிக்கின்ற இராணுவத் தடிப்புப் போக்குக்கு ஒரு சான்று. இத்தகைய போக்கில் - இராணுவ கெடுபிடித்தனத்தில் - விடயங்களைப படைத்தரப்பு அணுகுவதே பல குழப்பங்களுக்கு அடிப்படை என்பதே தமிழ் மக்களினது கருத்து.

வீதியில் - பொது இடத்தில் - நடைபெறும் குழப்பங்களின் போது அவற்றைப் பத்திரிகையாளர் புகைப்படம் எடுக்க அனுமதிக்க மாட்டோம் என்று மூத்த படை அதிகாரி ஒருவர் பகிரங்கமாகக் கூறுவது பத்திரிகைச் சுதந்திரத்துக்கு இந்த நாட்டில் எத்துணை மரியாதை உள்ளது என்பதை நிரூபிக்கப் போதுமானது.

அண்மையில் அரியாலை, மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற கலேபரத்தின் போது பத்திரிகையாளர் ஒருவரின் புகைப்படக் கருவி பறித்து, உடைத்து நொறுக்கப்பட்டது. அவரும் தாக்கப்பட்டார்.

இந்தச் செயலுக்கான அங்கீகாரத்தை வடபகுதிக் கட்டளைத் தளபதியின் கருத்து உறுதி செய்வதாக இருப்பது பத்திரிகைச் சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் ஆகியவை குறித்துப் பேசுவோரை அதிர்ச்சியில் ஆழ்த்தும் என்பது நிச்சயம்.

# சு.க. மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதியின் படம் மட்டுமே!

## கட்சிகள், தனிநபர் புகழ்பாடவும் தடை

கொழும்பு,ஒக்.22

நாளை மறுநாள் 24ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் சுதந்திரக் கட்சியின் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் புகைப்படம் மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட வேண்டும் வேறு யாருடைய புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்படக் கூடாது.

தனது தொகுதி அமைப்பாளர்களுக்கு சுதந்திரக் கட்சி வழங்கியிருக்கும் ஆலோசனைகளில் இதுவும் ஒன்றாகும். ஆர்ப்பாட்டப்பேரணி இணைப்புக் குழுவின் தலைவரான மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளரான மங்கள சமரவீர ஆகியோர் இந்த ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றனர்.

கட்சிகளின் அல்லது தனி நபர்களின் புகழ்பாடும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவோ அல்லது சுலோகங்கள் கோஷிக்கப்படவோ கூடாதெனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதியின் விசேட கொள்கைப் பிரகடனம் ஒன்று அன்று வெளியிடப்படும்.

(ஒ)

### கண்டியில் சம்பவம்:

# ஐ.நா. பெண் பிரதிநிதி மீது பாலியல் பலாத்கார முயற்சி!

## இராணுவத்தினர் இருவர் கைதாகி விளக்கமறியலில்!

ஐநா. அமைப்பின் பெண் பிரதிநிதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்த இராணுவ அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கண்டியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் கடந்த 19 ஆம் திகதி இரவு 1.30 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்ற அன்று பிரஸ்தாப ஹோட்டலில் தங்கியிருந்த நைஜீரிய நாட்டைச் சேர்ந்த கறுப்பின பெண உத்தியோகத்தர், விருந்தினர் மேசையில் அமர்ந்திருந்த வேளையில் இராணுவ மேஜர் ஒருவரும் கப்டன் தரத்தில் உள்ள ஒருவரும் கடும்போதையில் தள்ளாடியவாறே அந்த நைஜீரிய பெண்ணை நடனமாட வரும்படி அழைத்தனர். அதேவேளை, அந்தப் பெண் மீது பாலியல் சேட்டை புரிய அவர்கள் எத்தனித்த வேளையில், அந்தப் பெண் மறுக்கவே அவர் மீது இருவரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் உடனடியாக ஹோட்டல் ஊழியர்களால் கண்டி பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலீஸார் அங்கு விரைந்து அவ்விருவரையும் கைது செய்தனர். பின்னர் இருவரும் கண்டி மேலதிக மாஜிஸ்திரேட் தொடங்கொட முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். காயப்பட்ட பெண் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

### குண்டு வீச்சின் அகோரம்; 10பேர் உடல் சிதறிப் பலி! 100பேர் படுகாயம்!!

# பலஸ்தீனத்தில் என்றுமில்லாதவாறு பதற்றம்!

# தாக்குதல் தொடருமென இஸ்ரேல் அறிவிப்பு!!

காஸா,ஒக்.22

காஸா பள்ளத்தாக்கில் இஸ்ரேலியப் போர் விமானம் நடத்திய அகோரக் குண்டுவீச்சினால் பத்துப் பேர் உடல் சிதறிப் பலியாகினர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தாக்குதல்கள் மேலும் தொடருமென்று இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்திருக்கிறார். பதிலடியாக இஸ்ரேலியர்களை கொன்றுகுவிப்போம் என பலஸ்தீன தீவிரவாத குழுக்கள் சூளுரைத்துள்ளன. இதனால் அமெரிக்கா தனது பிரஜைகளை மத்திய கிழக்கு பகுதிகளுக்குச் செல்ல வேண்டாமென எச்சரித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் காஸா பள்ளத்தாக்கின் மத்திய பகுதிக்குள் திடீரென நுழைந்த இஸ்ரேலிய போர்விமானம் ஒன்று, அங்கு அகோரமான முறையில் குண்டுவீச்சு நடத்தியது. இதில் சம்பவ இடத்திலேயே பத்துப்பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் குழம்பிய பின்னர் பலஸ்தீனத்தில் நடத்தப்பட்டிருக்கும் இரண்டாவது குண்டுவீச்சு சம்பவம் இதுவாகும். இரண்டு குண்டுவீச்சு சம்பவங்களிலும் இதுவே கொடூரமானது என்று கூறப்படுகின்றது.

தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கை என்ற பெயரில் அங்குள்ள அகதிமுகாம் மீது நடத்தப்பட்டிருக்கும் இந்தக் குண்டுவீச்சுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

குண்டு வீச்சில் இறந்தவர்கள் எவரும் தீவிரவாதிகள் அல்லர் என்றும் அகதிமுகாம் மீதான தாக்குதல்கள் தவறுதலாக நடந்துள்ளது என்றும் இஸ்ரேலியத் தொலைக்காட்சி தெரிவித்திருக்கிறது.

போர் விமானம் மூன்று குண்டுகளை வீசியிருக்கிறது. முதல் இரண்டு குண்டுகளும் ரபா அகதி முகாமில் வீழ்ந்து வெடித்தன. இதில் மூவர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்துக்கொண்டிருந்த குழுவினர் மீது மூன்றாவது குண்டுவீச்சு நடத்தப்பட்டது. இதில் சிகிச்சையளித்துக்கொண்டிருந்த டாக்டர் ஒருவர் உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

தீவிரவாதிகள் பயணித்த கார் ஒன்றைக் குறிவைத்தே விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்திருக்கிறது.



குண்டுத் தாக்குதலில் சிதைந்துபோன கார் ஒன்றைச் சுற்றி நின்று கோஷமெழுப்பும் பலஸ்தீனர்கள்

**பலஸ்தீனம் கண்டனம்**

ஆனால், பலஸ்தீனத் தரப்பு இஸ்ரேலிய இராணுவத்தின் கூற்றை முற்றாக மறுத்திருக்கிறது. விமானம் வேண்டுமென்றே அகதி முகாம் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தியது என்று பலஸ்தீன தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

பலஸ்தீனத் தலைவர் அரபாத்தும் பிரதமர் குரேயும் விமானக் குண்டு வீச்சை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் அளவுக்கு மீறிய ஆயுதப் பிரயோகத்தை செய்திருக்கிறது. அது சமாதானத்திலும் சமரசத்திலுமுள்ள நம்பிக்கையை உதாசீனம் செய்திருக்கிறது என்று பலஸ்தீன அரச பேச்சாளர் சாஹிப் எரிக்கற் கூறியிருக்கிறார்.

இந்த ஆக்கிரமிப்புடன் உலகம் விழித்துக்கொள்ள வேண்டும் என்று பிரதமர் அஹ்மத் குரே உலக நாடுகளைக் கேட்டிருக்கிறார்.

**தீவிரவாதக் குழுக்கள் கடும் எச்சரிக்கை**

மேற்படி குண்டுவீச்சுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஹமாஸ், அல்அக்ஸா மாவீரர் படையணி மற்றும் அங்குள்ள தீவிரவாதக் குழுக்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

'இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு தாக்குதல்களுக்குப் பதிலடியாக இஸ்ரேலில் வைத்தே யூதர்களைக் கொன்று குவிப்போம். அதனை உலகின் எந்த நாடும் தடுக்கமுடியாது' என்று ஹமாஸ் சூளுரைக்கிறது.

**தாக்குதல் தொடரும்**

பலஸ்தீனத் தீவரவாதக் குழுக்களின் கடும் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத இஸ்ரேலியப் பிரதமர், பலஸ்தீனத்தில் தாக்குதல் தொடரும் என்று அறிவித்திருக்கிறார். அதற்கான உத்தரவு இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதனால், பலஸ்தீனர்களிடையே பதற்றமும், அச்சமும் நிலவுகிறது. மேலும் தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தினால் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பலஸ்தீன உயர்மட்டம் இரகசியமாகக் கூடி விமானத்தாக்குதல் குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறது என்று அங்குள்ள செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

**தனது பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை**

பலஸ்தீனத்தில் விமானக்குண்டு வீச்சு நடத்தப்பட்டதையடுத்து, மத்திய கிழக்கில் குறிப்பாக இஸ்ரேலிலும், பலஸ்தீனத்திலும் பதற்றம் நிலவுகிறது. எனவே, தனது பிரஜைகள் எவரையும் அங்கு செல்ல வேண்டாமென வாஷிங்டன் எச்சரிக்கை செய்துள்ளது.

## மேலும் முப்பது கர்தினால்கள் பாப்பரசரால் நேற்று நியமிப்பு



வத்திகான்,ஒக்.22

மேலும் முப்பது கர்தினால்களை பாப்பரசர் நேற்று நியமித்துள்ளார். இதன்படி ரோமன் கத்தோலிக்கத்தில் உள்ள கர்தினால்களின் எண்ணிக்கை 135ஆக அதிகரித்துள்ளது.

பாப்பரசர் உடல் நலக் குறைவு காரணமாக சேவையில் இருந்து ஓய்வுபெறவுள்ளார் என்று கூறப்படும் நிலையில் அவர் மேலும் முப்பது கர்தினால்களை நியமித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதன்படி 80 வயதுக்கு குறைந்த எவரையும் பாப்பரசராக நியமிக்கும் பொறுப்பு இவர்களிடம் விடப்படும்.

வத்திக்கானில் உள்ள சென்.பீற்றர் தேவாலய சதுக்கத்தில் எதிர்வரும் தினங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கர்தினால்களுக்கு சிவப்புத் தொப்பி அணிவிக்கப்படும். அன்றைய தினம் அங்கு கோலாகலமான விழாவும் நடைபெறும்.

இந்தியா, வியட்நாம், நைஜீரியா, அமெரிக்கா, கௌதமாலா, போலந்து ஆகிய நாடுகளில் இருந்து வத்திக்கான் சென்று பணியாற்றியவர்களில் முப்பது பேரே புதிய கர்தினால்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிப் பேர் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

(ஐ)

## சீனாவில் குடும்ப வறுமையால் 118 குழந்தைகள் விற்பனை!

### இடைத்தரகர்கள் 52 பேர் பிடிபட்டனர்

பெய்ஜிங்,ஒக்.22

சீனாவில் 118 பச்சிளம் பெண் குழந்தைகளை விற்பனை செய்த இடைத்தரகர்கள் 52 பேர் பொலீஸாரிடம் வசமாக மாட்டினர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸார் கூறியுள்ளனர்.

நாட்டின் வடபகுதியில் உள்ள குவாங்சி மாகாணத்திலேயே பெண் குழந்தைகளை விற்கும் கொடூரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளை வளர்க்க வசதியில்லாத காரணத்தால், சொற்ப தொகைக்கு பச்சிளம் குழந்தைகள் விற்கப்படுகின்றன. குழந்தைகளை கைமாற்றவென இடைத்தரகர் குழு ஒன்று அங்கு செயற்பட்டு வருவது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிறந்த உடனேயே 500 ரூபாவுக்கு தமது குழந்தையை விற்பது அங்கு வழக்கமாகி வருகிறது என்று பொலீஸார் கூறுகின்றனர்.

குழந்தைகளை மயக்கமுற்ற நிலையத்தில் வைத்து விற்கும் நடைமுறையும் அங்குள்ளது. இதற்கு மகப்பேற்று ஊழியர்களும் உடந்தையாக உள்ளனர்.

இடைத்தரகர்கள் ஒவ்வொரு குழந்தையையும் 500 ரூபாவுக்கு வாங்கி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாவுக்கு தத்தெடுப்பவர்களுக்கு விற்கின்றனர் என கூறப்படுகின்றது.

இடைத்தரகர்களாக செயற்பட்ட 52பேரே பொலீஸாரிடம் மாட்டியுள்ளனர். இவர்களில் 11 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விற்கப்படும் குழந்தைகள் மூடைகளில் கட்டப்பட்டு கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே குழந்தைகளை விற்பது அம்பலமாகியிருக்கிறது.

(ஐ)

## சக்கர நாற்காலியில் சிகரத்தில் ஏறி சாதனை

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற ஒருவர் சக்கர நாற்காலியில் அமர்ந்து சிகரத்தில் ஏறிச்சாதனை படைத்துள்ளார்.

ஜோகனஸ்பேர்க்கைச் சேர்ந்தவர் பெர்னாட் கூசன் (வயது28). இவருக்கு பிறவி முதலே இடுப்புக்கு கீழே செயற்படாத வகையில் கால்கள் இரண்டும் சூம்பியுள்ளன.

அங்குள்ள உலகப் புகழ்பெற்ற மலைச் சிகரம் கிளிமாஞ்சரோ. இதன் உயரம் 19,000 அடி.

இந்த சிகரத்தின் உச்சியை சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி எட்டிப் பிடித்துவிட லட்சியக் கனவு கண்டு வந்தார் கூசன். அதற்காக 10 மாதங்கள் தீவிர பயிற்சியும் மேற்கொண்டார் அது வீண்போகவில்லை.

சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி சிகரத்தை நோக்கி ஏறும் முயற்சியைத் தொடங்கினார். இவருக்கு குடும்ப உறுப்பினர் ஒருவரும், நண்பர் ஒருவரும் துணையாகச் சென்றனர்.

ஒன்பதே நாள்களில் 19 ஆயிரம் அடி ஏறி சிகரத்தைத் தொட்டார். சிகரத்தில் ஏறும்போது, உடல் வலியை விட காற்றின் தாக்கமே அதிகம் துன்புறுத்தியது என்கிறார் கூசன். (ஐ)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்
CELLULAR & COMPUTER HARDWARE (PVT) LTD;
260, Kasthuriyar Road, Jaffna. (ODEON MUSIC CENTRE)
T.P: 071 2513692 Mobile: 077 6165342
யாழ். மக்களே! எம்மிடம்... HAND PHONE, TABLE PHONE,
DIALOG, MOBITAL, (CARD LINE, PACKAGE LINE)
இணைப்புகளுடன் கூடிய தொலைபேசிகள் யாவும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
HAND PHONE, (PHONE UNLOCK, SIM UNLOCK)
பழுதுபார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்
சகல PHONE களுக்குரிய உதிரிப்பாகங்களும் (PARTS)
எம்மிடம் விற்பனைக்கு உண்டு. (C/30951)
CELLULAR & COMPUTER HARDWARE (PVT) LTD;
22-10-2003 தொடக்கம் 31-10-2003 வரை MOBITAL, DIALOG
மேசை தொலைபேசி (LAND PHONE) க்கு மட்டும் 2 YEARS WARRENTY வழங்கப்படும்.
260, Kasthuriyar Road, Jaffna.

தீபாவளி திருநாளை முன்னிட்டு...

Comform Carina Brassieres

வாங்கும் சகல வாடிக்கையாளர்களுக்கும் அளப்பரிய பெறுமதியான பரிசுகள்

FREE FREE

மேலும் விபரங்களுக்கு நாடுங்கள்

ஸ்ரீ முருகன்

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No: 021 222 5392

அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

இச்சலுகை 22,23, 10.2003.

இரு தினங்கள் மட்டுமே.


## மருந்துகள் வரவில்லை

கோப்பாய்,ஒக்.22

கோப்பாய் சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு இந்த ஆண்டுகுரிய நாலாம் கந்தாயத்திற்கான மருந்துகள் இதுவரையில் வந்துசேரவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களுக்கு மருந்துகளை தனியார் மருந்துக் கடைகளில் வாங்குமாறு சிட்டைகளில் எழுதிக் கொடுக்கப்படுகிறது.

அத்துடன், வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான மருந்துகளும் வெளியில் இருந்து பெறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10-72)


சித்திரமும் வழவழப்பும்

நுழைவுத்தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன!

IAT

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.

(24-11-14) (23920)



## நடிகர்கள் தேவை

செயல்திறன் அரங்க இயக்கம் புதிதாகத் தயாரிக்கவுள்ள தெருவெளி, மேடை நாடகங்களில் நடிகர்களாகப் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

சுயவிவரக் கோவையுடன் 30.10.2003 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு முகவரி:-

செயல்திறன் அரங்க இயக்கம்

'அருளகம்',

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(23916) (26-24-14-17)


## 60ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11 - 08 - 1926

மறைவு 22 - 08 - 2003

### அமரர் சதாசிவம் சொக்கலிங்கம்


எமது பாடசாலை ஆசிரியர் திரு. சொ. தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் சதாசிவம் சொக்கலிங்கம் அவர்களை நினைவுகூர்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

(23918) (26-24-14-17)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 07 - 1959

மறைவு 19 - 10 - 1987

### அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

திதி: 22.10.2003

ஆண்டுகள் பதினாறும் ஆயிற்றோ அந்தோ நீர் மறைந்து?
ஈண்டு உமது நினைவோடு நாம் இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

"கமலா ஸ்ரோர்ஸ்",
நவாலி வீதி,ஆனைக்கோட்டை. (23928) (24-11-14) - குடும்பத்தினர்.

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



- யாழ்.ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி
- அரச தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (NIC) ஆகியவற்றின் ஆண்டுப்பூர்த்தி விழா நடைபெற்ற போது, தலைமைக் காரியாலய விற்பனைப் பணிப்பாளர் அவர்களால்;
- யாழ்.மாவட்டத்திலேயே முதற்தரக் காப்புறுதியாளராகவும்,
- யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய வைப்புப்பணம் இட்டவராகவும், தெரிவுசெய்யப்பட்டு முதற் பரிசில்கள் வழங்கப்பட்டமைக்காக, வடமராட்சி நவிண்டிலைச் சேர்ந்தவரும் கல்வி நிலையங்களின் நிர்வாகியுமான

### திரு.நமசிவாயம் சங்கரலிங்கம்

அவர்களை

இதயபூர்வமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனி லிமிரெட்

(23896) முகாமையாளர், ஊழியர்கள், விற்பனை முகவர்கள். (24-14-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராஜா நாகேஸ்வரி

(நாகம்மா)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா நாகேஸ்வரி 19.10.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் நடராஜாவின் அருமை மனைவியும் லோகேஸ்வரன், லோகினிதேவி, மகேந்திரராஜா (பிரான்ஸ்), ரஞ்சனாதேவி (கனடா), விஜயகுமார் (பிரான்ஸ்), கலா (பிரான்ஸ்), சரோஜாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வமாலினி, புண்ணியமூர்த்தி (இந்தியா), தனலட்சுமி (பிரான்ஸ்), செல்வக்குமார் (கனடா), சந்திரநாயகி (பிரான்ஸ்), சிவேந்திராகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்லா ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்சனா, தனுஸ்ரன், கீர்த்தனா, டிலக்சன், தவேதனா, சிவாகுமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (இந்தியா), ராஜகுமார் (இந்தியா), சசிகலா (இந்தியா), ஜனதீபன், தர்சினி, பிரதீபன், கஜானி, காரணி, கஜீபன், சாயிசோபிகா, ஜெனார்த்தினி, ஜெனனன், ஜெனாஸன், ஜெனனீ, நிலானி, நிவேதன், நிஸளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கரைப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆனைக்கோட்டை. (23915) (24-11-14) லோகேஸ்வரன் (மகன்)

### இராமநாதக் குருக்கள் கல்யாணசுந்தரக் குருக்கள்

(மாப்பிள்ளைக் குருக்கள்)

இந்தியா, விளத்தூரைப் பிறப்பிடமாகவும் நவிண்டில், சக்கலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதக் குருக்கள் கல்யாணசுந்தரக் குருக்கள் 21.10.2003 (செவ்வாய்) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பூட்டம்மாளின் அன்புக் கணவரும் கனகசபாபதி குருக்கள் (ராஜாமணி - இந்தியா), இராமநாதன் (இந்தியா), ராஜம் (இந்தியா), சுசிலா (இந்தியா), மக்களாம்பாள் ஸ்ரீதரன் (யா/பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), புவனேஸ்வரி ஜெகதீஸ்வரன் (வடமத்திய மகளிர் கல்லூரி, பொலிகண்டி இ.த. பாடசாலை) ஆகியோரின் தந்தையும் சர்வேஸ்வரசர்மா ஜெகதீஸ்வரன், சாம்பசிவ சர்மா பரமேஸ்வர சர்மா, காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி. (23927) (24-11-14)

தகவல்:
இராஜாராம் ரவீந்திரசர்மா
(பேரன்).

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 07 - 1926

மறைவு 02 - 11 - 2002

### அமரர் மூத்ததம்பி குருசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 22.10.2003

கடமையில் கண்ணாக காரியம் செய்தீர்
இடையினில் ஈசன் உம்மை ஏன் தானோ அழைத்தான்
மடையினில் வெள்ளம் போல பெருகுது கண்ணீர் - அப்பா
உடைமையை இழந்த எம்மைத் தேற்றுவார் யாரோ அப்பா?
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

'ஸ்ரீரங்கம்'
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (C/30946) (24-14-17)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உதயன்

# போக்குவரத்து விதிகளை மீறாத போக்கு அவசியம்

யாழ்ப்பாணத்தில் பெருங் குழப்பங்களையும் சர்ச்சையையும் ஏற்படுத்திய யாழ். கன்னியர் மடச்சந்தி விபத்துத் தொடர்பாக முக்கிய உத்தரவு ஒன்றை யாழ். நீதிமன்றம் பிறப்பித்திருக்கின்றது.

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்பதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

நீண்ட நெடுங்காலமாக யாழ்ப்பாணத்திலும் குடாநாட்டின் ஏனைய பல பகுதிகளிலும் சிவில் நிர்வாகம் ஒழுங்காகப் பேணப்படவில்லை.

சிவில் நிர்வாகச் சீரழிவால் பாதிப்புற்ற துறைகளில் ஒன்று போக்குவரத்துப் பிரிவாகும்.

வீதிகள் நீண்டகாலமாக சீரமைக்கப்படவில்லை, வாகனங்கள் தொடர்பான சட்ட ஒழுங்கு ஏற்பாடுகள் சரிவரக்கடைப்பிடிக்கப்படவில்லை, சாரதி அனுமதிப் பத்திர விநியோகப்பணிகள் சுமார் ஒரு தசாப்த காலம் மேற்கொள்ளப்படவேயில்லை.

1990-95களில் யாழ். குடாநாட்டின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் இந்தப் பின்னடைவுகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் ஓரளவு மேற்கொள்ளப்பட்டன. புலிகளின் தமிழீழ நிர்வாக முறைமையின் கீழ் விசேட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகூட மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், 1996 இல் குடாநாட்டின் பெரும் பகுதி அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வீழ்ந்தபின்னர் நிலைமை மீண்டும் மோசமானது. நீண்ட பல வருடங்களாக சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம் போன்றவை விநியோகிக்கும் ஏற்பாடுகளே செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆனால், 90களின் பிற்பகுதியிலேயே குடாநாட்டில் போக்குவரத்து சட்ட விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை போக்குவரத்துப் பொலீஸ் பிரிவும் நீதிமன்றங்களும் இறுக்கத் தொடங்கின. குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான - நீதியான - நடைமுறை ஒன்றை ஒழுங்குபடுத்தாத சிவில் நிர்வாகம், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் ஓட்டியோரை மடக்கி, சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கத் தொடங்கியது.

சட்டப்படி- ஒழுங்குப்படி- பொதுமக்கள் செயற்படுவதற்கு வசதி செய்துகொடுக்காத சிவில் நிர்வாகம், அப்படி செயற்படாததற்காக மக்களைத் தண்டிக்கப்பின்நிற்கவில்லை.

ஆனால், அதேநேரம் சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய - கட்டாயம் பின்பற்ற வேண்டிய - அரச படையினர் அதைச் செய்யாமல் இருந்ததை சிவில் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. இதைத்தான் யாழ். நீதிமன்றம் இப்போது ஒரு வழக்கின் மூலம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் ஓடித்திரியும் - கண், மண் தெரியாமல் பறந்து செல்லும் படையினரின் வாகனங்களில் எத்தனை - சட்டத்தின் கட்டாயப்படி ஆகக் குறைந்தது - மூன்றாந் தரப்புக் காப்புறுதியைக் கொண்டிருக்கின்றன? யாராவது இதனைக் கவனித்தார்களா?

யுத்த காலத்தில் அசாதாரண சூழ்நிலை நிலவியது. எனவே, காப்புறுதியுடன் தான் படையினரின் வாகனங்கள் வீதிக்கு வரவேண்டும் என்ற சட்டத்தின் கட்டாயத்தை அந்த அசாதாரண நிலையில் கடுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதை யாழ். நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இது யதார்த்தத்தை நீதிமன்றம் புரிந்துகொண்டதால் வெளியிடப்பட்ட கருத்து.

ஆனால், அதற்காக சாதாரண சூழ்நிலையிலும் - யுத்தமற்ற அமைதி நிலையிலும் - வீதிப்போக்குவரத்து விதிகளை படையினர் தமது கைகளில் எடுத்துக் கொள்ள முடியாது என்பது யாழ். நீதிமன்றத்தினால் படைத்தரப்புக்கு இப்போது சரியாக உணர்த்தப்பட்டிருக்கின்றது.

யாழ். பிரதேசத்தில் படைத்தரப்பு வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடம்பெறும் விபத்துக்கள், சர்ச்சைகளை, குழப்பங்களை, களேபரங்களை ஏற்படுத்தி வரும் பின்னணியில் இராணுவ வாகனங்கள் தொடர்பாக இப்போது கிளப்பட்டிருக்கும் பிரச்சினை முக்கியமானதாகின்றது.

போக்குவரத்து விதிகள், ஒழுங்குகள் மற்றும் சட்டங்களுக்கு அமைவான வாகனங்களையே படையினர் வீதிகளுக்கு இறக்கியுள்ளனர் என்பதை பொதுமக்களுக்கு உறுதிசெய்து உணர்த்தும் வகையிலான நடவடிக்கைகளைப் படைத்தரப்பு வெளிப்படுத்துவது அவசியமாகின்றது.

அதேவேளை, போக்குவரத்துச் சட்ட விதிகளை பொதுமக்கள் மீறாமல் இருக்கின்றார்களா என்பதை வெள்ளை 'ஹெல்மெட்' டுடன் வீதிகளில் ஆங்காங்கே தோன்றி 'குடையும்' பொலீஸாரும் அதே 'கரிசனை'யை படைத்தரப்பின்பாலும் காட்டவேண்டும்; போக்குவரத்து விதிகளை மீறுவதற்கு படையினரையும் அனுமதிக்க மாட்டோம் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் வளர்க்கும் விதத்தில் அவர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

விபத்துக்களின் பின்னர் தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கும் நிலைமையைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுள் இது முக்கியமானது.

## காலத்தின் பதிவு



கட்டடங்கள் மட்டுமல்ல......  படம்: தேவா

வலி. வடக்கு பிரதேசத்தில்

# மீளக்குடியமர வந்தோர் மீண்டும் வன்னி திரும்பினர்

தெல்லிப்பழை,ஒக்.22

வலி.வடக்கில் மீளக்குடியமர்வதற்கென வன்னியிலிருந்து வருகைதந்த ஆறு குடும்பங்கள் இருப்பிட வசதி இல்லாமையால் மீண்டும் வன்னிக்கு திரும்பியுள்ளன எனக் கூறப்பட்டது.

வலி.வடக்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

வலி.வடக்கினை சொந்த வதிவிடமாகக் கொண்ட அதே வேளை, தற்போது இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து வந்த ஆறு குடும்பத்தினர் மீளக்குடியமரும் நோக்கத்துடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வன்னியிலிருந்து வருகை தந்திருந்தனர்.

இவர்கள் மீளக்குடியமரும் வகையில் வன்னியில் இருந்த குடும்பப் பதிவுகள் அனைத்தையும் வலி.வடக்கிற்கு மாற்றுவதற்கான ஒழுங்குகளையும் செய்திருந்தனர்.

எனினும், இவ்வாறு மீளக்குடியமர வந்தவர்களில் சிலரது வீடுகள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருந்தமையால் இவர்களால் சொந்த வீடுகளில் மீளக்குடியமர முடியவில்லை. இன்னும் சிலரது வீடுகள் உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னணியில் 600 மீற்றர் எல்லைக்குள் இருந்தமையால், படையினர் இவர்களை வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் இந்தக் குடும்பங்கள் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை நாடினர். எனினும், அங்கு நிலவும் சுகாதார, வதிவிட, குடிதண்ணீர் நெருக்கடிகள் காரணமாக அங்கும் தங்க விரும்பாத இவர்கள் தமது பதிவுகளை வலி. வடக்கில் மேற்கொள்ளவேண்டாம் எனத் தெரிவித்துவிட்டு மீண்டும் வன்னிக்குத் திரும்பிவிட்டனர் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-150)

சமுர்த்தி திட்டத்தின் கீழ்

# சிறுவர் கழகங்களை நிறுவுமாறு சுற்றறிக்கை மூலம் கோரிக்கை

வலி.தெற்கு,ஒக்.22

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சிறுவர் கழகங்களை அமைத்து செயற்படுத்துமாறு சமுர்த்தி அதிகார சபையின் அபிவிருத்திப் பிரிவு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் சமுர்த்தி அதிகார சபையின் அபிவிருத்தி பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பரநதுபட்டுள்ள சகல சிறுவர்களையும் ஒன்று சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கமைய பிரதேச செயலர் பிரிவுகளில் பரந்துபட்டு காணப்படும் சிறுவர்களை இணைப்பதற்கு இதன் மூலம் வழிசெய்யுமாறு சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களிடையே காணப்படும் கவின்கலைத் திறன்களை மேம்படுத்த சந்தர்ப்பமளித்தல், சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள், கெடுதிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், சர்வதேச சிறுவர் உரிமைகளை அனுபவிக்க வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறுவர்களை ஆரோக்கியமுள்ள சமூகத்தினராக உருவாக்குதல், அவர்களிடையே நற்பண்புகளை வளர்த்தல் போன்ற அடிப்படை நோக்கங்களைக் கொண்டு சிறுவர் கழகங்களை அமைத்துச் செயற்படுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வயது தொடக்கம் 16 வயது வரையான சிறுவர்களே இந்தக் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அமைக்கப்படவுள்ள சிறுவர் கழகங்களில் அங்கத்தவர்களின் படைப்பாற்றல், திறன்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்றும் -

ஒவ்வொரு மாதத்திலும் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்தவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

### நாளை

ஐப்பசி 06
வியாழக்கிழமை
(23.10.2003)
திதி : திரயோதசி
முன்னிரவு 11.15 வரை.
நட்சத்திரம : உத்தரம்
முன்னிரவு: 8.20 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 7.32-9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆற்றல்களில் மிஞ்சிய ஆற்றல் மனிதனது மன ஆற்றல்.

வலி. தெற்கு பிரதேசத்தில்

# பத்து கிராம அலுவலர் பிரிவுகளில் மிதிவெடி அபாயம் என அறிவிப்பு

வலி.தெற்கு,ஒக்.22

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளில் மிதிவெடி அபாயம் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதாக உடுவில் உதவிப் பிரதேச செயலர் ஆர்.ஜெயப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் மத்தி, சுன்னாகம் தெற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை மேற்கு, ஏழாலை மத்தி, ஏழாலை கிழக்கு, ஏழாலை தென்கிழக்கு, குப்பிளான் வடக்கு, குப்பிளான் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஆகிய பத்து கிராம சேவையாளர் பிரிவுகளே இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

'ஹலோ டிரஸ்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மத்தி, சுன்னாகம் தெற்கு ஆகிய பகுதிகளில் முதலில் மிதிவெடிகள் அகற்றும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

இவ்விடங்களில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்தவுடன் ஏனைய பகுதிகளில் மிதிவெடி அகற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் - உதவிப் பிரதேச செயலர் தெரிவித்தார். (எ-152)

# 'லைசென்ஸ்' பெறுவதற்கு விண்ணப்பித்தோருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.22

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். அலுவலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் எழுத்துப் பரீட்சைகள் நடைபெறுகின்றன.

இது குறித்து விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

கடிதம் கிடைக்காதவர்களை யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும் -

யாழ். மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 2ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு 2002/2003

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2002/2003 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 15.12.2003 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: மேற்படி திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

1) வர்த்தக முதற் கற்கைநெறி
2) கலை முதற் கற்கைநெறி
3) நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4) நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5) நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம், நான்காம் வருடம

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி I கற்கைநெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்

விண்ணப்பப்படிவம் 50.00 ரூபா
பாடத்திட்டமும் விதி முறைகளும் 100.00 ரூபா
(முதற்கலை/முதல் வர்த்தக நெறிக்கானது)

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலகத்தில் மாலை 2.00 மணிமுதல் 4.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 16.50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

20-10-2003 , - பதிவாளர்.
(சி-3094 I)(21-15-19)



## நினைவு கூருகின்றோம்

இணுவில்பதி பெருமகன் மஹா வித்துவான்
பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்
அவர்களது திடீர் மறைவு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடியார்கள்,
சித்தி வைரவர் அம்பாள் ஆலயம்.
குமரகோட்டம்
கோண்டாவில்.
(23899) (21-15-19)



## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

வீரஜனனம்
16 - 05 - 1974



வீரச்சாவு
22 - 10 - 1990

### வீரவேங்கை நிர்மலன்
(தியாகராஜா - றஜீவன்)

எங்கள் அன்பு மகனே வேலவனே
நீ எரிந்து நீறாகிவிட்டாயா?
இல்லையடா நினைவாகியுள்ளாய்!
நீ காற்றாகிக் கரைந்து போய்விட்டாயா?
இல்லையடா காவியமாகிவிட்டாய்!
வேங்கைகள் என்றும் தூங்குவதில்லை
விடுதலையைத் தவிர
வேறு எதற்கும் ஏங்குவதில்லை!

*மாவீரர்களே உமை நாம் மறவோம்.*

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.
(23903) (21-15-19) - பெற்றோர்.


## குளங்களைப் புனரமைக்க கோரிக்கை

கோப்பாய்,ஒக்.22

கோப்பாய் பிரதேசத்திலுள்ள அம்மன் கோவில் குளம், வேளைக் குளம், உக்கவில்குளம், குண்டுக்குளம ஆகியவற்றை ஆழமாக்கி செப்பனிட்டு நீர்க் கொள்ளளவை அதிகரிக்க உதவுமாறு கோப்பாய் சமூக சேவா சங்கம, விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்குளங்களில் தற்போது அம் மன்குளம், வேளைக்குளம் ஆகிய வையின் குளக்கட்டுகள் திருத்தப்பட் டுள்ளன. குளங்களை ஆழமாக்கும் பணி நடைபெறவில்லை.

1993ஆம் ஆண்டு இக்குளங்கள் யாவும் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தினால் ஆழமாகப் பட்டு செப்பனிடப்பட்டன. அதன் பின்னர் எந்த அபிவிருத்தி வேலை களும் மேற்கொள்ளப்படவில்லை.

(ம-72)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
குமாரசாமி சிவயோகவதி

*ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டதம்மா போகவில்லை என் துயரம்*
*ஆறவில்லை என் துயரம்*
*என்னைத் தவிக்க விட்டு நீண்ட தூரம் சென்றீரோ?*
*ஆண்டவன் அடிபற்றி உம்மை*
*இனி எப்போது அகிலத்தில் நாம் காண்போம்?*
*ஆண்டுகள் பல சென்றாலும் அம்மா*
*உங்கள் அன்புள்ளத்தை*
*என்நெஞ்சு ஒருபோதும் மறவாது.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

அன்னையின் அரவணைப்பில் 04-06-1965
இறைவனின் அரவணைப்பில் 12-11-2001
திதி 22-10-2003

உங்கள் நினைவுடன் வாழும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

குருக்கள் மாவடி,
மிருசுவில்.
(23880)(21-15-11)





தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு.....................!
உங்களுக்குத் தேவையான அனைத்து ஜவுளி, ஆடை, சாறி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

### மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

0777 311486

10, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(மலாயன் கபே முன்)

3000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு சிறுவர்களுக்கான ஸ்கூல்பாக் 1 இலவசமாக வழங்கப்படும்.
(21-15-11)








## SHARP

be Sharp

உங்களது பழைய கறுப்பு/வெள்ளை (Black & White) அல்லது கலர் தொலைக்காட்சியை எங்களிடம் தந்து புத்தம் புதிய ஷார்ப் (SHARP) தொலைக்காட்சி ஒன்றை இன்றே எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

ரூபா 10,000/= வரைக்கும் **விஷேட கழிவுடன்**

அதி உன்னத யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஷார்ப் (SHARP) தொலைக்காட்சியை 5வருட உத்தரவாதத்தில் இன்றே வாங்குங்கள்.

தாமதித்தால் தோல்வி நிச்சயம். ஏனைய பொருள்களுக்கு இம்மாதம்

### விஷேட விலைக் கழிவு

விவரங்களுக்கு:
*முகாமையாளர்*

### பிறவுண் அன்ட் கம்பனி

பிறவுண்ஸ் காட்சியறை
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 5150
0777-110791

# ஏழு பொ.ஐ.மு. முன்னாள் அமைச்சர்கள் பட்ஜெட்டை ஆதரித்து வாக்களிப்பார்கள்?

அரச கட்சி எம்.பிக்கள் சிலர் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவளிப்பர் என்று பொ.ஐ.மு. தலைவர்கள் சிலர் கூறுகையில் பொ.ஐ.மு. முன்னரள் அமைச்சர்கள் எழுவர் அரசை ஆதரிக்க முன்வந்துள்ளனர் என்று ஐ.தே. முன்னணி முக்கியஸ்தர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

அரசின் புதிய வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறும்போது அந்த ஏழு முன்னாள் அமைச்சர்களையும் அரசுத் தரப்பில் அமரச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்த பின்னர் அவர்கள் அரசுத் தரப்பில் அமருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏழு முன்னாள் அமைச்சர்களில் நால்வர் அரசின் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து சபையில் உரையாற்ற இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் எனவும் ஐ.தே. முன்னணி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

**பௌஸி**

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி கூறுகையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லா முஸ்லிம் உறுப்பினர்களும் ஒன்றுகூடித் தனித்தரப்பு தொடர்பாக ஏற்கனவே பல தீர்மானங்களை எடுத்துள்ளோம். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, நாட்டின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்களின் நலன்கருதியே சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களும் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். இதில் தவறு ஒன்றும் இல்லை - என்றார்.

**விக்கிரமபாகு**

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியதாவது:-

சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும் என்பதை வலியுறுத்த நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை விவாதம் நடத்துவதால் எந்தப் பயனும் இல்லை. புலிகள் ஏற்றுக்கொண்டால் தனித்தரப்பாக பங்குகொள்ளலாம்.

முஸ்லிம் காங்கிரஸின் ஒத்திவைப்பு பிரேரணை விவாதம் சமாதானப் பேச்சைக் குழப்புவதாகக்கூட அமையலாம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் ஏற்கனவே ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளனர். செய்துகொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும், அதில் ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால் புலிகளுடன் நேரடியாகப் பேசி நிவர்த்தி செய்துகொள்ளவும் வேண்டும். முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் கருத்துக்களையும் புலிகள் நிராகரிக்கவில்லை. உள்வாங்கியே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

- இவ்வாறு அவர் கூறினார்.

# மீனவர் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியா ~ இலங்கை ஒப்பந்தம்

## விரைவில் செய்துகொள்ள இணக்கம்

புதுடில்லி,ஒக்.22

இலங்கையையும் இந்தியாவையும் சுற்றியுள்ள இந்து சமுத்திரத்தில் கடல்வள நடவடிக்கைகள் சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவதென புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இணக்கம் காணப்பட்டது.

தங்களின் கடல் எல்லைகளுககு வெளியே தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அடிக்கடி பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்பதால் அவை தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளை ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுக்களிலேயே இந்த இணக்கம் காணப்பட்டது.

இரு நாடுகளையும் பிரிக்கும் பாக்குநீரிணையைப் பயன்படுத்தி இரு நாடுகளுக்கும் பொருளாதார நன்மைகள் கிடைக்கும் வழிவகைகளை வகுக்கவேண்டும் என்று இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு இரு தரப்பிலும் அனுமதி வழங்கப்பட்டது.

புதுடில்லி இம்பீரியல் ஹோட்டலில் இச் சந்திப்பு நடைபெற்றது.

## சுழற்சிமுறை கடன்

கொழும்புத்துறை,ஒக்.22

ஐநா. உலக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ். பல நோ.கூ.சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து யாழ். பல நோ.கூ. சங்க கிளைகளின் எல்லைப் பரப்புக்குள் வசிக்கும் பயனாளிகளுக்கு சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு சங்க கிளைப் பரப்புக்குள் இருந்தும் 3 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். கட்டங்கட்டமாக இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் எனவும் கூறப்பட்டது.

(ம-30)



உடுப்பிட்டி நலன்புரிச்சங்க காரியாலயப் பாவனைக்காக ரூபா 12 லட்சத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் சங்கத் தலைவர் செ.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது. கனடாவிலிருந்து வருகைதந்த பொறியியலாளரும் பிரபல தொழிலதிபருமான வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# பொது அரசியல் திட்டம் என்ன? பேச்சு ஆரம்பிக்க முன் கூறுங்கள்

## சு.கவின் கடிதத்துக்கு ஜே.வி.பி. பதில் கடிதம்

கொழும்பு,ஒக்.22

நாடு எதிர்நோக்கும் நெருக்கடி நிலைக்குப் பரிகாரமாகத் தயாரிக்கப்படவிருக்கும் பொது அரசியல் திட்டம் என்ன? ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதியிருக்கும் பதில் கடிதத்திலேயே அவர் இக்கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

பொது அரசியல் திட்டம் பற்றிய பேச்சுக்கு அழைப்பு விடுத்து சு.க. பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஜே.வி.பிக்கு ஏற்கனவே கடிதம் எழுதியிருக்கின்றார்.

பொது அரசியல் திட்டம் குறித்து பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அந்தத் திட்டம் குறித்து ஜே.வி.பி. அறிந்துகொள்ள வேண்டியிருப்பதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (எ)

## மலையகத் தலைவர் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

கிளிநொச்சி,ஒக்.22

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மலையகத் தலைவர்கள் சந்திக்கவுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், ராதாகிருஷ்ணன் ஆகியோரும் - மறுநாள் இ.தொ.க. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம்தொண்டமானும் மற்றும் எம்.எஸ்.செல்லச்சாமி ஆகியோரும் - சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளனர்.

# அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் நுளம்புத்திரி ஏன்?

**நுளம்புத்திரியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமுள்ளது. எனவேதான் நுளம்புத்திரி அத்தியாவசிய பொருள்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டது என அரசு தெரிவிக்கிறது. இந்தக் கருத்துச் சரியானதுதானா என ஆராய்கிறது இக்கட்டுரை. 'லக்பிம' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

வியாபார நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஐந்து வகையான பாவனைப் பொருள்களை அத்தியாவசிப் பொருள்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அவ்விதம் அத்தியாவசியப் பொருள்களாக சிமெந்து, எல்.பி.எரிவாயு, பால்மா வகைகள் (கொழுப்பு கலந்த பால்மா மற்றும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் மா மற்றும் குழந்தைகளின் பால்மா வகைகள்), நுளம்புத்திரி மற்றும் தீப்பெட்டி ஆகிய ஐந்து பொருள்களும் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் பலரது கவனத்தை ஈர்க்காததொரு பொருளான நுளம்புத்திரி இந்த ஐந்துவகை அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டிருப்பது ஒரு சிலரின் சந்தேகத்துக்கும், விமர்சனத்துக்கும் காரணமாகியுள்ளது. அதற்கான காரணம் எதுவாக இருந்தபோதிலும், உண்மையில் மனிதர்களது சாதாரண வாழ்க்கைக்கு வேறு பல பொருள்கள் அத்தியாவசியமானவையாக இருக்கும் நிலையில், வர்த்தகசந்தையில் கடும் கிராக்கி அற்றதொரு பொருளான நுளம்புத்திரி எந்த அடிப்படையில் இவ்விதம் அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டதென்ற வினாவுக்கு விடைகாணுதல் சிரமமான தொரு விடயமாகும்.

பொதுமக்கள் தமது சாதாரண வாழ்க்கையை மேற்கொள்ள அத்தியவாசியமானதொரு பொருளெனக் கருதும் அளவுக்கு நுளம்புத்திரி எவ்விதம் முன்னிலைப்படுத்தப்பட்டது என்பது பற்றி அத்தியாவசியப் பொருளகள் தொடர்பான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளதோர் அதிகாரியான நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபையின் தலைவரான திருமதி ஆர்.விமலசேனவிடம் கேட்டபோது...

"தற்போது வர்த்தக சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள்களிடையே அத்தியாவசியப் பொருள்களென்ற வகையில் பொருத்தமான பொருளகளைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் நாம் செயற்பட்டோம். நுளம்புத்திரி தொடர்பான சிந்தனை எங்கள் கவனத்தை ஈர்த்தது. நுளம்புத்திரி ஸ்ரீலங்காவில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பாவனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அந்த வேளையில் ஒரு பெட்டி நுளம்புத்திரி எட்டு ரூபா என்ற சிறிய தொகையொன்றுக்கே விற்பனை செய்யப்பட்டது. அண்மைக் காலத்தில் அது ஆரம்பகால விலையைப்போன்று நான்கு மடங்கு விலையாக உயர்ச்சியடைந்துள்ளது. எமது அதிகார சபையின் கூட்டத்தில் நாம் இவ்விலையேற்றம் குறித்து பரிசீலனை செய்தோம். கிராமப் பிரதேசங்களில் மக்கள் பெரிய அளவில் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபடத் தற்போது நுளம்புத்திரியை பெருமளவில் பாவிக்கின்றனர். இந்நுளம்புத்திரியின் விலையை நியாயமற்றவகையில் மேன்மேலும் அதிகரிப்பதைத் தவிர்க்கும் நோக்கத்தில் நாம் அதனையும் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாகப் பிரகடனப் படுத்த முடிவு செய்தோம்" எனத் தெரிவித்தார்.

இந்நுளம்புத்திரிப் பாவனை ஸ்ரீலங்காவில் எண்பதுகளின் முற்பகுதியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நுளம்புத் தொல்லையினின்றும் விடுபட சிறந்ததொரு வழியாக இந்நுளம்புத்திரிப் பாவனை இனம் காணப்பட்டது. 'மிஸ்டொக்', 'பேகோன்', 'மோட்டீன்', 'லயன்' மற்றும் 'நின்ஜா' ஆகிய வியாபாரப் பெயர்களில் விற்பனைச் சந்தைக்கு வந்திருக்கும் இந்நுளம்புத்திரிகள் ஆரம்பகாலத்தில் அதிக அளவில் விற்பனையாகவில்லை. அதனைப் பயன்படுத்தும்போது வெளியேறும் புகையும், வித்தியாசமான மணமும் உடல் நலத்துக்கு கேடு விளைவிப்பதாகப் பொதுமக்களிடையே நிலவிய எண்ணமே இது ஆரம்பத்தில் பொதுமக்களால் பாவனைக்குத் தவிர்க்கப்பட்டமைக்கான காரணமாகும். மேலும் இதனது பாவனை தற்காலிகமாக நுளம்புகளை விரட்டுவதற்குப் பயன்படுமேயொழிய நுளம்புகளை முற்றாக அழித்தொழிக்கப் பயன்படாது என்பதும் மற்றொரு காரணமாகும்.

## வியெஸ்ரி

இந்நுளம்புத்திரியின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளில் வர்த்தக நிறுவனங்கள் பல்வகை உத்திகளைக் கையாளும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகள் போன்ற பொதுஜன ஊடகங்கள் மூலமும் வேறு பலவகையான பிரசாரங்கள் மூலமும் பொதுமக்களைக் கவரும் வகையில் விளம்பரங்களை மேற்கொண்டு இந்நுளம்புத்திரி விற்பனை அதிகரிப்பை வியாபாரிகளால் ஏற்படுத்திக்கொள்ள இயலும்.

பத்து நுளம்புத்திரிகள் கொண்ட பெட்டிகளே முதல்முதலில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் 'லூஸ் பைக்கற்' என்ற வகையில் ஒரு சோடி நுளம்புத்திரிகளை 'பொலித்தீன்' கடதாசியில் பொதிசெய்ததன் மூலம் சிறிய அளவிலான தேவையை நிறைவேற்றும் வகையில் விற்பனைக்கு விடப்பட்டன. படிப்படியாக ஓர் ஒழுங்குமுறையில் இந்நுளம்புத்திரியின் விலை அதிகரிக்க ஆரம்பித்ததையடுத்தே வியாபாரிகள் இந்த வகையிலான விற்பனையை மேற்கொள்ள ஆரம்பித்தனர். தற்போது பத்து நுளம்புத்திரிகள் அடங்கிய பெட்டியொன்று 36 ரூபாவரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்நுளம்புத்திரியை உபயோகிக்கும் பலர் தற்போது ஒரு சோடி நுளம்புத்திரிகளை வாங்குவதையே வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். ஒரேமுறையில் நுளம்புத்திரிப் பெட்டியொன்றை விலைக்கு வாங்கக்கூடிய நிதிநிலைமை பெரும்பாலான பாவனையாளர்களிடம் தற்போது இல்லாததே இதற்குக் காரணமாகும்.

இந்நுளம்புத்திரிப் பாவனை ஸ்ரீலங்காவில் புழக்கத்துக்கு வந்து சுமார் 20 ஆண்டுகள் கடந்துவிட்ட இன்றைய நிலையில், இதனை பொதுமக்களின் அத்தியாவசியப் பாவனைக்கான ஒரு பொருளாக நிர்ணயிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் விவகாரம் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரமாணங்களுக்கமைய அரசு அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டமூலம் இந்நுளம்புத்திரியும் பொதுமக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருள்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொருள்களின் விலை தற்போதும் உயர்ந்தவண்ணமுள்ளது. ஆனால், பொதுமக்கள் தம் வாழ்க்கையை ஓட்டிச்செல்வதற்கான அத்தியாவசியப் பாவனைப் பொருள்களாகத் தற்போது ஐந்து பொருள்கள் மட்டுமே அரசின் பார்வையில் பட்டுள்ளது. எமது நாளாந்தப் பாவனைப் பொருள்களான அரிசி, பருப்பு, சீனி, பாண் மற்றும் கோதுமை மா உட்பட்ட உணவுப் பொருள்கள் தற்போது கடைகளில் நெருப்பு விலையில்தான் விற்பனையாகின்றன. அவ்வித பொருள்களின் விலையை நியாயமற்ற விதத்தில் மேலும் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்குப் பொறுப்புடையவர்கள் எவரும் இதுவரை அவ்வித நடவடிக்கையை மேற்கொள்ள முன்வரவில்லை.

பொதுமக்களது அன்றாடத் தேவைகளுக்கான குறிப்பிட்ட பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் பொறுப்புடையவர்கள் ஒன்றில் இவ்வியாபாரிகளின் நெருங்கிய உறவினர்களாகவோ அல்லது இவ்வியாபாரிகளிடம் விசேட சலுகைகள் அல்லது லஞ்சம் பெறுபவர்களாகவோ இருக்கக்கூடும். ஆனால், பொருள்களின் விலை நாளாந்தம் உயர்வடைந்தவண்ணமே உள்ளது. ஆனால், அதற்கேற்ப சம்பள உயர்வேதும் வழங்கப்படுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.


நாட்டில் பொதுமக்களது அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலை நியாயமற்ற வகையில் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தியாகவேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்தவகையில், பொதுமக்களது அத்தியாவசியப் பாவனைக்கான பொருள்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டியவை உண்மையில் சாதாரண பொதுமக்களுக்கு அன்றாடம் அவசியமான பொருள்களென இனங்காணப்படும் பொருள்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் முக்கியத்துவம் வழங்கி சட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். நாளுக்குநாள் வயது அதிகரித்து வரும் மூத்த சகோதரியை வீட்டில் வைத்துக்கொண்டு இளைய சகோதரிக்கு திருமணம்செய்து பார்க்க முயலும் ஒரு சகோதரனின் செய்கை போன்றல்லாது இந்த அத்தியாவசியப் பொருள்கள் குறித்த தெரிவு உரியமுறையில் - நியாயமான வகையில் - மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். இல்லையேல், பொதுமக்கள் நுளம்புத்திரியை உண்டு வெறும் தண்ணீரை மட்டுமே குடித்துவிட்டு நித்திரை செய்யவேண்டிய நிலை ஏற்படும். *

## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003
## மாதிரி வினாத்தாள் இல-1

**வினாத்தாள்-I** **நேரம் : 45 நிமிடம்**

❑1 முதல் 3 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட உருவங்களுடன் மிகவும் தொடர்பான சொல்லின் கீழ்க் கீறிடுக.

1.  (1) அழகு (2) குளிர்மை (3) வீடு

2.  (1) மாணவர் (2) பாடசாலை (3) அறிவு

3.  (1) பாதுகாப்பு (2) ஓய்வு (3) படம்

❑4-6 வரையுள்ள வினாக்களில் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அவை குறிக்கும் சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

4. ★ மின் சாதனங்களில் ஒன்றாகும்.
   ★ தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
   ★ சிறுவர்களுக்கு இதில் பிரியம் அதிகம்
   ★ கட்புல, செவிப்புல சாதனங்களில் ஒன்றாகும்.
   (1) வானொலி (2) தொலைபேசி
   (3) பத்திரிகை (4) தொலைக்காட்சி ( )

5. ★ மனித உயிரின வாழ்விற்கு மிக அவசியம்.
   ★ பூமியின் பசுமைக்கு உதவுகின்றன.
   ★ உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.
   ★ மழை பெய்வதற்கும் காரணமாக உள்ளன.
   (1) வானம் (2) கடல்
   (3) தாவரங்கள் (4) முகில்கள் ( )

6. ★ இயற்கை வளங்களில் ஒன்றாகும்.
   ★ பூமியின் அதிக பகுதி இதனால் சூழப்பட்டுள்ளது.
   ★ மூன்று நிலைகளில் இது காணப்படலாம்.
   ★ மீன்களின் உயிர் வாழ்விற்கு அவசியமாகும்.
   (1) உணவு (2) நீர்
   (3) நிலம் (4) பாசி ( )


❑7-8 வரையுள்ள வினாக்களில் முதலாவதாகத் தரப்பட்டுள்ள பொருளிலிருந்து ஏனைய நான்கு பொருட்களிலும் மூன்று உருவாக / உருவாக்கக் கூடியன. ஒன்று உருவாக / உருவாக்க முடியாது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக

7. முட்டை ⟶ கோழி (1) பாம்பு (2) குயில் (3) மயில் (4) ( )

8. வித்து ⟶ செடி (1) பயறு (2) வாழை (3) வெண்டி (4) ( )

❑ 9-13 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

9. மாதவன் சிறிய பெட்டியொன்றைப் பெரிய பெட்டி ஒன்றினுள் இட்டான். பின்னர் அதன் தோற்றங்களை முன்னாகவும் பின்னாகவும் இருந்து வரைந்தான்.




முன்-பின் தோற்றம் பக்கத் தோற்றம்


மேலிருந்து பார்க்கும் போது இவ்விரு பெட்டிகளும் எவ்வாறு தோற்றமளிக்கும்?




(1) (2) (3) (4)

10. எழுத்து P இற்கு கிட்ட ஒரு தளவாடி பிடிக்கப்பட்டது. இவ்வாறு F என்ற எழுத்தைப் பிடிக்கும் போது ஆடியில்எவ்வாறு தோற்றமளிக்கும்?



(1) (2) (3) (4)

11. 

1 2 3


மேலுள்ளவாறு தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஒரு கோலத்தில் அமைவுமாறு செவ்வகங்கள் அமைக்கப்படின், அடுத்ததாக அமையும் செவ்வகத்தில் எத்தனை தீக்குச்சிகள் இருக்கும்?
(1) 18 (2) 20 (3) 25 (4) 28

12. TEAM என்பதை [4|9|6|8] என எழுதப்பட்டால் MEAT என்பதை எழுதப்படும் விதம் யாது?
(1) [4|6|9|8] (2) [8|4|9|6]
(3) [8|9|6|4] (4) [4|8|9|6]

13. மழைநாட்களில் எப்பொழுதும் காணக்கூடியது
(1) இடி (2) மின்னல்
(3) குடை (4) வெள்ளம்


14. காகத்தின் கூட்டில் எப்பொழுதும் காணப்படுவது
(1) முட்டை (2) சிறியதடித்துண்டுகள்
(3) குஞ்சு (4) இறக்கை

15. கீழ்வரும் எழுத்து ஒழுங்கமைவிற்கேற்ப வேறுபட்ட உரு




(1) (2) (3) (4)

16. கீழ்வருவனவற்றில் வலஞ்சுழித் திசையில் அமைந்த உரு




(1) (2) (3) (4)

❑கீழ்வரும் எண் கோலங்களின் தொடர்பினை அவதானித்து வெற்றிடங்களில் வரவேண்டிய விடையின் கீழ் கீறிடுக.

17. 

(1) 18 (2) 20 (3) 9

18. 

(1) 8 (2) 9 (3) 10


❑ கீழுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முறையே மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

19. நாம் நாயை வீடுகளில் வளர்ப்பது
(1) நாய் நன்றியுள்ள மிருகம் என்பதனால்
(2) நாய் காட்டில் வாழமுடியாது என்பதனால்
(3) நாய் வீட்டைக் காக்கும் என்பதனால்

20. நாம் பாடசாலைகளில் கல்வி கற்பதற்குக் காரணம்
(1) எல்லோரும் கல்வி கற்பதனால்
(2) பாடசாலைகள் கட்டியிருப்பதால்
(3) அறிவை வளர்ப்பதற்காக.


★சரியான விடைகுறிக்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக

21. மேலுள்ளவற்றில் ஒத்த உருவங்கள் எவை?




A B C D E

(1) AB (2) BD
(3) BC (4) AC

22.  இவ்வுருவில் உள்ளதும் அதிகமாகக் காணப்படாத வடிவம் எது?
(1) செவ்வகம் (2) சதுரம்
(3) முக்கோணி (4) வட்டம்

23. பின்வருவனவற்றில் செங்கோணத்திலும் குறைந்ததைக் காட்டும் உரு



(1) (2) (3) (4)

❑சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

24. விமலை விட அனில் 30ரூபா குறைவாக வைத்திருந்தான். அவர்கள் இருவரிடமும் மொத்தமாக 90ரூபா இருந்தால் அனிலிடம் எத்தனை ரூபா இருக்கும்.
(1) 45ரூபா (2) 30ரூபா
(3) 120ரூபா (4) 60ரூபா

25. ஒருவட்டப் பாதையின் நடுவில் நின்று மேற்குத்திசையைப் பார்க்கும் ஒருவன் இடஞ்சுழியாக அரைவட்டம் திரும்பிப் பார்க்கின்றான். தற்போது அவன் நோக்கும் திசை யாது?
(1) வடக்கு (2) கிழக்கு
(3) தெற்கு (4) மேற்கு


26. தற்போது கம்சனினதும் அம்சனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்கள் ஆகும். 5வருடங்களுக்கு முன் இவர்கள் இருவரதும் வயதின் கூட்டுத் தொகை யாது?
(1) 30வருடங்கள் (2) 15வருடங்கள்
(3) 35வருடங்கள் (4) 25வருடங்கள்

❑கீழ்வரும் கூற்றுக்களில் எவ்வாறேனும் நடக்கமுடியாத கூற்றைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

27. (1) பாடசாலையில் ஒரு வகுப்பறையில் 40 கதிரைகள் இருந்தன. எனினும் அங்கு 41 மாணவர்கள் படித்தனர்.
(2) ஒரு பாடசாலையில் இரண்டு கிணறுகள் இருந்தன. எனினும் தண்ணீர்த் தொட்டியில் நீர் இருக்கவில்லை.
(3) கண் பார்வை இழந்த மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து இரசித்தனர்.
( )

28. (1) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நேரம் 45நிமிடங்கள் எனினும் 'ச செய்து முடித்தான்.
(2) தரம் 5 புலமைப் பரிசில் பரீட் இற்கான நேரம் 1மணி 15நிமிடங் தோற்றிய சுருதிகன் 1மணி கொடுத்தான்.
(3) தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் வரும் மாணவனான தூயவன் சி


❑உருவப் படத்தினை அவதானித்து கோடிடுக




29. இங்கு கூடுதலாகக் காணப்படுபவை
(1) ஆடுகள் (2) கோழிகள்


30. இங்கு குறைவாகக் காணப்படுபவை
(1) ஆடுகள் (2) கோழிகள்

❑31-35வரையுள்ள வினாக்களில் த ஒவ்வொன்றினதும் இரகசியக் குறியீ வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் உ புள்ளிக் கோட்டில் எழுதுக.





31. குந்தகம் ( )
33. சங்கமம் ( )
35. பங்கயம் ( )

❑கீழே தரப்பட்டுள்ள இருபடங்களி இடங்களுக்குப் பொருத்தமான வடிவ அதன் கீழ்க் கீறிடுக.

36. 

(1) (2)

37. 

(1) (2)

❑சரியான விடையின் கீழ்க் கோடிடுக

38. பருமனின் ஒழுங்கு முறைப்படி பிர விடை எது?
(1) நாடு, மாவட்டம், மாகாணம், கிரா
(2) உலகம். நாடு, மாகாணம், மாவ
(3) கிராமம், மாகாணம், மாவட்டம்,

39. ஆண்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற் முறையில் காட்டும் விடை எது?
(1) பொன்விழா, மணிவிழா, பவளவி
(2) வெள்ளிவிழா, மணிவிழா, பொன்
(3) வெள்ளிவிழா, பொன்விழா, மணி

40. எழுத்துக்களின் அளவிற்கு ஏற்ப ஒழு விடை எது?
(1) சொல், எழுத்து, வாக்கியம், பந்
(2) கட்டுரை, பந்தி, வாக்கியம், சொ
(3) எழுத்து, கட்டுரை, சொல், பந்தி.

## வினாத்தாள்-

❑கீழ்வரும் பாடலை வாசித்து அதன் விடைகளை எழுதுக.

தங்கத் தட்டுப் போலவும்
தங்கை முகத்தைப் போல
வானில் நிலவு மிதக்குது
முகில்கள் அதனைத் தழுவு
குளத்தில் அல்லி பூக்குது
கடலில் அலைகள் சிரிக்கு
அழகில் உலகு மிதக்குது
மனம் அதனைக் கண்டு

1. இப்பாடலில் கூறப்படும் காட்சி ஒரு நடைபெறும்? ..............................
2. முகில்கள் எதனைத் தழுவுகின்றன? ...
3. பாடலில் நிலவு எவற்றுக்கு உவமித்து ..............................
4. கடலில் சிரிப்பது எது? ..............................
5. பாடலில் உள்ள உயர்திணைச் சொல்
6. பாடலில் குறிப்பிட்டது போல குளத்தி ..............................

❑ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக
7. முகம் - .............................. 9. கட
8. குளம் - .............................. 10. அ

ரீட்சை வினாத்தாள் I இ...ற்கான
னும் 'சுரமிகன் 35 நிமிடத்...தில்

பரீட்சையில் வினாத்தாள் II
நிமிடங்கள் எனினும் அதற்குத்
மணி 25நிமிடத்தில் செய்து

சையில், வகுப்பில் முதலாவதாக
வன் சித்தியடையவில்லை.
( )


**னித்து சரியான விடையின் கீழ்க்**




டுபவை
கள் (3) பிராணிகள்


டுபவை
கள் (3) பிராணிகள்


**ளில் தரப்பட்டுள்ள சொற்கள்**
**குறியீட்டை மேலே தரப்பட்ட**
**அதன் உரோமன் இலக்கத்தைப்**

IV. 
V.

32. சங்கரன் ( )
34. வசந்தன் ( )

**ங்களிலும் வெற்றிடமாகவுள்ள**
**ன வடிவத்தைத் தெரிவு செய்து**

(2) (3)


(2) (3)


**காடுக.**
படி பிரதேசங்களைக் காட்டும்

ம், கிராமம், உலகம்
, மாவட்டம், கிராமம்
ட்டம், நாடு, உலகம்
த ஏற்ப விழாக்களை ஒழுங்கு
து?
வளவிழா, வெள்ளிவிழா
பொன்விழா, பவளவிழா
, மணிவிழா, பவளவிழா
ஒழுங்கு முறையில் அமைந்த

ம், பந்தி, கட்டுரை
, சொல், எழுத்து
பந்தி, வாக்கியம்

## ாள்-2

**அதன் கீழுள்ள வினாக்களுக்கு**

போல்வும்

தழுவித்

சிரிக்குது

ண்டு மகிழுது

ஒரு நாளில் எப்பொழுதினில்
........................................
ன? ........................................
மித்துக் கூறப்படுகின்றன?
........................................
சொல் எது? ........................................
த்தில் மலரும் பூ எது?
........................................
க
9. கடல் - ........................................
10. அலைகள் - ........................................

**எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுக.**

11. சிரிப்பு- ................................ 12. மகிழ்ச்சி- ................................


**ஆங்கிலச் சொற்களில் எழுதுக**

13. வானம் - ................................ 14. குளம்- ................................
14. முகில்கள்- ................................ 16. முகம்- ................................

**பின்வருவனவற்றின் சரியான விடையை கணித்து எழுதுக.**


17. | 7 6 3 4 | இந்த எண்ணில் இலக்கம் 6 குறிக்கும் இடப் பெறுமானம் யாது? ................................

18. 
அமீர் தான் வைத்துள்ள எண். அட்டைகளால் உருவாக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் உள்ள வித்தியாசம் யாது?
................................


19. 
இந்த கடதாசி அட்டையை மடித்து ஒட்டினால் கிடைக்கப் பெறும் திண்ம உரு யாது?
................................

20. 


அருகே உள்ள மருந்துக் கலவையில் 25ml கொள்ளக்கூடிய 20 குப்பிகளில் சம அளவில் அடைத்தால் எஞ்சியிருக்கும் மருந்துக்கலவையின் அளவு யாது?
................................

21. 
அருகே உள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?
................................


**கீழ்வரும் இசைக்கருவிகள் தரம் 5 மாணவர்கள் தங்கள் அழகியல் செயற்பாடுகளில் அறிந்து கொண்டவை ஆகும்.**
அந்த இசைக்கருவிகளின் பெயர்களை எழுதவும்.

22. 

................................

23. 

................................

24. 

................................

25. 

................................

26. இசைக்கருவி B இல் உயர்ந்த தொனி எழுப்புவதற்கு கம்பிகள் இறுக்கமாகவா? தளர்வாகவா? இருக்க வேண்டும்.
................................
27. இவ் இசைக்கருவிகளால் இசைக்கக்கூடிய ஏழு சுரங்களையும் எழுதுக.
................................
28. இந்து ஆலயங்களில் மேல் உள்ளவற்றில் எக்கருவி அதிகம் பயன்படுத்தப்படுகிறது?
................................
29. D வகை இசைக்கருவியின் மாதிரியை ஆக்கச் செயற்பாட்டின் போது மாணவர்கள் செய்வதற்கு தேவையான புல்வகைத் தாவரப் பகுதி எது?
................................

**கீழ் வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. தற்போது இலங்கையில் ஒரு தபாலட்டையின் பெறுமதி எவ்வளவு?
(1) ரூபா 2.00 (2) ரூபா 3.00
(3) ரூபா 4.50 (4) ரூபா16.50
31. கீழ்வருவனவற்றில் ஆணிவேருள்ள தாவரம் எது?
(1) தென்னை (2) நெல் (3) பனை (4) பலா
32. கீழ்வருவனவற்றில் வெள்ளை நிறப்பூ அல்லாதது எது?
(1) மல்லிகை (2) நந்தியாவட்டை
(3) செவ்வந்தி (4) நித்தியகல்யாணி
33. கீழ்வருவனவற்றில் பறக்கும் பூச்சியல்லாதது எது?
(1) தேனீ (2) இலையான் (3) எறும்பு (4) நுளம்பு
34. கீழ்வரும் பிராணிகளில் சுவாசிப்பதற்கு மூக்குப் போன்ற அமைப்பு இல்லாத பிராணி எது?
(1) நாய் (2) மாடு (3) யானை (4) மீன்


**கீழ்வருவனவற்றின் தனிச் சொல்லை எழுதுக.**


35. கைகொட்டி ஆடும் கிராமிய நடனம்................................
36. இயல்பாக இருக்கவேண்டிய வெப்பநிலையை விட உடம்பில் சூடு அதிகமாக இருக்கும் நிலை................................
37. வெள்ளி என்றழைக்கப்படும் கிரகத்தின் மறுபெயர்................................
38. மீன், ஓணான், போன்றவற்றின் உடலின் மீது செறிவாக மூடியிருக்கும் விறைப்புடன் கூடிய தோல் அடுக்கு................................
39. பனையின் முற்றிய ஓலை................................


**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக**


40. பல்வேறு நிறக்கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யும் ஆக்கம்
(1) பூ ஆக்கம் (2) கொலாஜ் (3) இழைத்தல்
41. சிறுவர் ஆக்கத் தொழிற்பாட்டில் விளையாட்டு இரட்டைத்தேணி செய்வதற்குப் பொருத்தமான ஊடகம் எது?
(1) பலகை (2) குருத்தோலை (3) கடதாசி
42. உருவங்கள் செய்வதற்கும் செதுக்குவதன் ஊடாக ஆக்கம் செய்வதற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமானதும் இலகுவானதுமான ஊடகம் எது?
(1) களிமண் (2) கடதாசி (3) மெழுகு
43. பின்னுதல், இழைத்தல், தொடர்பான அடிப்படைத்திறன்களை விருத்தி செய்வதற்குரிய ஆக்கங்களைச் செய்வதற்குச் செலவில்லாது பெறக்கூடிய பொருள்.
(1) குருத்தோலை (2) நூல் (3) கடதாசி
44. சிவப்பு நிறத்தையும் நீலநிறத்தையும் சம அளவில் கலந்து பெறப்படும் நிறம் எது?
(1) நீலம் (2) பச்சை (3) ஊதா

**பின்வரும் உபகரண அமைப்புக்களின் பெயர்களை எழுதுக.**

45. 
................................

46. 
................................

47. 
................................

48. 
................................

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "✓" எனவும் பிழையாயின "×" எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

49. 'ஆம்பல்' எனும் தாவரம் இலங்கைக்கே உரித்தானது. ( )
50. வேப்பம் வித்து நீரினால் பரம்பல் அடைகின்றது. ( )
51. குருவிச்சை நிலத்தில் வேரூன்றி வாழும் தாவரமாகும். ( )
52. வித்துக்களைப் பயன்படுத்தி "அல்பனா' ஆக்கங்களைச் செய்ய முடியும். ( )
53. புதிய தாவரங்களை உருவாக்க வித்துக்கள் பயன்படுவதில்லை ( )

**செந்தாளன் கடைக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கினான். அவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| சீனி | - 6k 500g | எலுமிச்சம்பழம் | -6 |
| சவர்க்காரம் | - $\frac{1}{2}$ டசின் | பருப்பு | - 500கிராம் |
| தேங்காயெண்ணெய் | - 2லீற்றர் | பால் | - 1 போத்தல் |
| உப்பு | - 2பைக்கற் | துணி | - $3\frac{1}{2}$ மீற்றர். |

54. செந்தாளன் வாங்கிய பாலின் அளவை மில்லிலீற்றரில் எழுதுக.
................................ml
55. அவன் வாங்கிய துணியின் அளவை சென்ரிமீற்றரில் எழுதுக.
................................cm
56. 1kg சீனியின் விலை 47 ரூபா எனின் அவன் வாங்கிய சீனியின் மொத்தவிலை யாது?
..............ரூபா ..................சதம்
57. 1kg பருப்பின் விலை 65 ரூபா எனின் அவன் வாங்கிய பருப்பின் பெறுமதி யாது?
..............ரூபா ..................சதம்
58. கடையில் இருந்த 9 சமஅளவான உப்பு பைக்கற்றின் மொத்தநிறை 2k 250g ஆகும். செந்தாளன் வாங்கிய உப்புப் பைக்கற்றுக்களின் மொத்த நிறை யாது?
................................g
59. அவன் வாங்கிய சீனியினை 250கிராம் நிறையுள்ள சமஅளவான பைக்கற்றுக்களாக அடைத்து வைத்திருந்தான் எனில் அவன் எத்தனை பைக்கற்றுக்களில் அடைத்திருப்பான்?
................................
60. அவன் வாங்கிய ஒவ்வொரு எலுமிச்சம்பழத்திலும் 15ml விதம் புளித்திரவம் இருந்தது. எனில் அவன் எல்லாவற்றிலும் உள்ள புளித்திரவத்தினைச் சேர்த்த பின் அதனை மேசைக்கரண்டியினால் எத்தனை தடவை அளக்கலாம்?
................................

**பின்வரும் படங்களின் சிங்களச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

61.  (1) ஓல (2) පුටුව (3) මේසය
62.  (1) ඇස (2) කන (3) කට
63.  (1) කොළය (2) මල් (3) මල

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதுக**

64. பழமொழியைப் பூர்த்தி செய்க.
வல்லவனுக்குப்................................
65. கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார்?
................................
66. "தம்பி பழைய புத்தகத்தைக் கிழிக்கின்றான்" இவ்வாக்கியத்தில் காலத்தை காட்டும் சொல் யாது?
................................
67. பலாவுக்கு "சுளை" போல மாம்பழத்திற்கு
................................
68. ல,ள,ழ, எழுத்துக்களால் இடைவெளியை நிரப்புக
(1) உ......வாளி (2) உ......வர் (3) உ......கம்

**பின்வருவனவற்றின் தமிழ் சொல்லை எழுதுக**

69. CHAIR ................................ 72. BOOKS ................................
70. TABLE ................................ 73. BLACK BOARD ................................
71. CLOTH ................................ 74. BOTTLES ................................

**மரஞ்செடி கொடிகளைப் பேணுவது எமது கடமையாகும் ஏனெனில் இந்த தலைப்பின் கீழ் ஆறுவாக்கியங்கள் எழுதுக.**

75. ................................
76. ................................
77. ................................
78. ................................
79. ................................
80. ................................

**தயாரிப்பு : ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்.**

## ஐ.நா.தின விழா

தென்மராட்சி,ஒக்.22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் தின விழா நாளை பிற்பகல் 3.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயத்தினருடன இணைந்து பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பெறுமதிமிக்க பரிசில களும், சான்றிதழ்களும் வழங்கப் படுமென கழகச்செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ம-117)

## படையினர் டிராக்டர் மோதி இளைஞன் காயம்

வவுனியா,ஒக்.22

வவுனியா செட்டிக்குளம் பகுதியில படையினரின் டிராக்டர் மோதி இளை ஞர் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற் பகலில் செட்டிக்குளம் பிரதான வீதி யில் சைக்கிளில் சென்று கொண் டிருந்த இளைஞர்கள் மீதே படை யினரின் டிராக்டர் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதலியார் குளம், செட்டிக்குளத் தைச் சேர்ந்த கஜன் (வயது 21) என்ற இளைஞனே காயமடைந்து செட்டிக்குளம் ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## வசதிகளின்றி இயங்கும் தென்மராட்சி கல்வி வலயம்

தென்மராட்சி,ஒக்.22

தென்மராட்சி கல்வி வலய அலு வலகம் வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது.

அலுவலகத்திற்கு நிரந்தர கட் டட வசதிகள் இல்லாததால் தனி யார் வீடுகளிலேயே இயங்கி வரு கிறது.

அலுவலகம், நிதிக்கிளை ஆகி யவை தனித்தனி கட்டடங்களில் இயங்கி வருகின்ற போதிலும் இது வரை இக் கட்டடங்களுக்கு மின்சார வசதி செய்யப்படவில்லை.

வலயப் பிரதேசத்தில் இயங்கு கின்ற போதிலும் கல்வி அலுவலகத தில் போட்டோபிரதி இயந்திரம் இல் லாததால் பணம் கொடுத்தே தமது தேவை களைப் பூர்த்திசெய்ய வேண டியுள்ளது. (ம-117)

## வடமராட்சியில் கல்வி மேம்பாட்டு பேரவை அமைப்பு

வடமராட்சி கிழக்கு,ஒக்.22

யாழ். மாவட்டத்தில் வலய ரீதியாக கல்வி மேம்பாட்டுப் பேரவை அமைக் கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக வடமராட்சி கல்வி வலயத்தில் கல்வி மேம்பாட் டுப் பேரவை அண்மையில் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப பாளர் அருண்மாஎப்ரா கலந்துகொண்டு மங்கள விளக்கினை ஏற்றி வைத்தார். வடமராட்சி கல்விக்கழகப் பொறுப் பாளர் கி.தாயகன், வடமராட்சி அர சியல்துறைப் பொறுப்பாளர் தயா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் வே.தி.செல்வரத்தினம், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர் கள், பொது ஸ்தாபனங்களின் பிரதி நிதிகள் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டார்கள். (ம-182)


**தளபாட விற்பனை**

புடைவைக் கடைக்குரிய தள பாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

அரஸ்கோ கட்டடம்,
இல.341, கண்டி வீதி,
அரியாலை.
(23888)

**RAM CD WORLD**

**மலிவு விற்பனை**

21.10.2003 முதல்
24.10.2003வரை

ஓடியோ CD 80/=
வீடியோ CD 100/=
வீடியோ CD படம் 180/=

ராம் CD வேல்ட்,
220, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (23894)

SALE SALE SALE

பாதணிகள் மலிவு விற்பனை

பாடசாலை மாணவர்களுக்கான
கறுப்பு, வெள்ளை சப்பாத்துக்கள்,
ஆண்களுக்கான பாதணிகள்,
பெண்களுக்கான பாதணிகள் என்பன

10% முதல் 35% வரை விலைக் கழிவில்

உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்.
224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(23861) (பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக) (21-12-17)

"தீபாவளி"
கொடுக்கல் வாங்கல் வைபவத்திற்கான
மக்கள் வங்கியின்
அழைப்பு

இந்து மக்களின் புனித தீபத்திருநாளாம் **தீபாவளி** தினத் தன்று **(24.10.2003) வெள்ளிக்கிழமை** கொடுக்கல் வாங்கல்களுக்காக சகல கிளைகளும் காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் 12.00மணி வரை திறந்திருக்கும் என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் ரூபா10,000/= அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை 1 வருட காலத்திற்கு, சேமிப்புக் கணக்கிலிடும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் எமது பாரம்பரியத்தை பேணும் வகையில் அழகிய தீப விளக்கொன்று அன்பளிப்பாக வழங்கப்படும். இக்கணக்குகள் யாவும் "ஜெயசிறி" சீட்டிழுப்பிற்கு தகுதிபெறும்.

இத்தகைய பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்தவைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் மனமறிந்த
(C/30937) (21-11) மக்கள் வங்கி

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு
பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட
புத்தம் புதிய டிசைன்களிலான
வண்ண வண்ண ஆடைகளை
மலிவுவிலையில்
பெற்றிட யாழ்.நகரில்

மகா சில்க்ஸ் பியூட்டி சில்க்ஸ்

32, 40A, நவீன சந்தை(உட்புறம்), யாழ்ப்பாணம்.
69, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
(சி-30932)(21-11-12)


## நெஞ்சை விட்டு நீங்காத நினைவுகளில்

முதலாம் ஆண்டு இருபதாம் ஆண்டு





திருமதி
கந்தசாமி பரமேஸ்வரி

அமரர்
தில்லையம்பலம் கந்தசாமி

25.03.1953 - தோற்றம் - 12.03.1950
02.11.2002 - மறைவு - 24.07.1983

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் மிளிர்ந்த எம் - தந்தையே!
ஆலமரம் போல எம்மை ஆதரித்த எம் - அன்னையே
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த எம் - பெற்றோரே!
கூடிழந்த பறவைகள் போல தவிக்கின்றோம் - பிள்ளைகள் நாம்
உங்கள் அரவணைப்பை எப்பிறப்பில் காண்போம் - இனி?

மாதகல் வடக்கு,
மாதகல். - பிரிவால் வாடும்:
(23892) (21-11) பிள்ளைகள் குடும்பத்தினர்.

உ
சிவமயம்

## சிறுப்பிட்டி - பெருந்தலை
# பர்வதி பரமேஸ்வரன் திருக்கோயில்

மேற்படி ஆலய கும்பாபிஷேகத்திலும் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக வைபவத்திலும் பிரதமகுருவாக இருந்து எங்களை வழிநடத்தி ஆசிவழங்கிய சபரீசதாசன்

## பிரம்மஸ்ரீ தா்னு.வாசுதேவசிவாச்சாரியார்

அவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து *"சிவாகம வித்தியா சாகரன்"* எனும் சிறப்பு விருதினை வழங்கி நாம் வழங்கிய

# மங்கல வாழ்த்து



அன்புடனே இடபத்து ஈசன் அடி
சரியை யினால் போற்றும் மா வைமைந்தன்
அன்னமேறும் வாணி அனு கிரகத்தில்
வேத மொடு நூல்கள் யாவும் கற்றே
பார் போற்றும் பருத்தி நகர்ச்சிவனை நாளும்
பக்தி ஆல் ஒருபூசை பணிந்தே செய்த
உள்ளமதில் மல்லிகையின் வெண்மை பொங்கு
உத்தம வாசுதேவ குருவே வாழி!

ஆண்டவனை இரு கரத்தால் இசைந்தே தூய
கிரியை களைஇனிதே ஆற்றும் அரசு
மட்டுநகர் மாநில யானை முகன் தம்பி
மயிலேறு பெருமானை மனத்திற் கொண்டு
சுவை பெருகு பலா சுளைக் குரலில்
மந்திர மணி ஒலியாய் மகிழச் செய்த்
முல்லைச் சிரிப்பதனை முகத்திற் கொண்ட
உத்தம வாசுதேவ குருவே வாழி!

இதயமதில் யோக நிலை தான் கண்டு
புலி தோலிசைத்த புருஷனிடம் பக்திகொள்ள
பூசரராம் மஹாதேவ குருவின் நம்பி
வாழை யடிவாழை எனவளர்ந்த ஆசான்
எம்மன மதனில் அறுகுபோல் வேர்பரவி
குயிலிசை யால் முக்கண்ணன் முன்புஓத
நித்ய கல்யாணா நின்பாத மதைப் பற்றி
உத்தம வாசுதேவ குருவே வாழி!

ஈகையுடன் ஞானவழி தான் நடக்கும்
மாதுளை நிறத்தை ஒத்தவேதியச் செல்வர்
மான் மழுவவதை ஏந்தும் அரி இசைத்த
நால்வேத முழுப் பொருளாம் ஓங்காரத்தை
சுட்டிய சேவற் கொடி யோன் போல
குருவாக பிச்சி மணம் வீசும் சான்றோர்
கும்பமொடு வில்வ மதால் பூசை செய்யும்
உத்தம வாசுதேவ குருவே வாழி!

(23907) (26-21-11) - *ஆலய பரிபாலன சபை*

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பலாத்காரத் திணிப்பு எதுவும் இல்லை!

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி

ஏறாவூர்,ஒக்.22

இலங்கையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச சமூகம் எந்தவொரு தீர்வினையும் பலாத்காரமாகத் திணிக்கப்போவதில்லை.

- இவ்வாறு ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வோட்டன் எல்வில்டன் தெரிவித்தார்.

இலங்கையர்கள் தமக்கிடையில் பேச்சுக்களை மேற்கொண்டு தீர்வினைக் கண்டுபிடிப்பதற்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் மாத்திரமே சர்வதேச சமூகம் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு சனிக்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரையும் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஏறாவூர் அஹமட் பரீட் மீராலெவ்வை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இங்குதொடர்ந்து உரையாற்றிய ஐரோப்பிய யூனியன் வதிவிடப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பல்லின சமூகக்கட்டமைப்பினைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரு சமூகம் மற்றுமொரு சமூகத்தில் தங்கி வாழ்வது பொதுவான விடயம் ஆகும். எந்தவொரு பிரதேசத்திலும் பெரும்பான்மை சமூகம், சிறுபான்மை சமூகத்தினரை அடக்கி வாழ்வதற்கு சர்வதேச சமூகம் துணைபுரியப் போவதில்லை.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகளில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு அதிகரிக்கவுள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான தமது அறிக்கையினை சர்வதேச சமூகத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நாம் இதுவரை அறிந்துகொண்ட விடயங்களில் இருந்து இது ஒரு சிக்கலான விடயம் என்று கருதுகிறோம். எனினும் பேச்சுமூலம் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்ற உறுதியான நம்பிக்கை சர்வதேச சமூகத்திற்கு இருக்கிறது - இவ்வாறு அவர் கூறினார்.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.(ஐ)

### தென்மராட்சி கிழக்கில் உதவி அரச அதிபர் பிரிவு

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்திற்கான உதவி அரச அதிபர் பிரிவு எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 29 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக இப்பிரிவு இயங்கவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இப்பிரிவினை ஆரம்பிப்பதற்காக உள்நாட்டலுவல்கள அமைச்சருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### படகு கவிழ்ந்து சிறுவன் உயிரிழப்பு!

வடமராட்சி கிழக்கு கடலில் படகு கவிழ்ந்ததில் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதியில் நான்கு இளைஞர்கள் மீன்பிடிப்பதற்காக படகில் சென்றுள்ளனர்.

அவ்வேளை - கடல்கொந்தளிப்பால் அவர்கள் சென்ற படகு கவிழ்ந்தது. இதனால், அவர்கள் கடலில் மூழ்கியதில் இவர்களில் ஒருவரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

ஆழியவளையைச் சேர்ந்த சிவலிங்கம் ஸ்ரீமுரளிதரன் (வயது 17) என்ற சிறுவரே உயிரிழந்தவராவார். சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-9)

# பருத்தித்துறை - சரசாலை வீதியில் பாலம் அருகே புதிய பாதை அமைப்பு

தென்மராட்சி,ஒக்.22

பருத்தித்துறை - சரசாலை வீதியில் சேதமடைந்த பாலத்திற்கு அருகில் தற்காலிக பாதை ஒன்றினைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

இந்த தற்காலிக பாதை ஊடாக கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்லமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இவ்வீதியூடாக சாவகச்சேரி வரை சேவையில் ஈடுபட்ட பஸ்ஸினை வரணி, மந்துவில், வேம்பிராய், கனகன்புளியடி ஊடாக சாவகச்சேரிக்கு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பிரதேச மக்களும், சாவகச்சேரியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் வ.பி.போ.சபை பொது முகாமையாளரை மகஜர் மூலம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்ட பணியாளர் அது வெடித்து காயம்!

## கோப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

நிலக்கண்ணி ஒன்றை அகற்ற முற்பட்ட வேளை அது வெடித்ததில் 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் பிரிவுப் பணியாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்திற்கு முன்னுள்ள வயல்வெளியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த அமிர்தநாதன் அன்ரனிவிஜி (வயது-24) என்பவரே காயமடைந்தவராவார்.

இரு கைகளிலும் கடும் காயங்களுக்குள்ளான இவர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-12-15)

# 5 ஆண்டுகளில் 1,096 பாடசாலைகளுக்கு மூடுவிழா!

# வடக்கு - கிழக்கிலேயே கூடுதலான பாடசாலைகள்!!

## கல்வி அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

திருகோணமலை,ஒக்.22

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு முழுவதிலும் 1,096 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கிலேயே அதிக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டுக்கும் 2002ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியிலேயே 1,096 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் புள்ளிவிவர அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த 20 வருடங்களில் யுத்தம் காரணமாக பல பாடசாலைகள் அழிந்துவுள்ளன. பல பாடசாலைகள் மூடப்பட்டன. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மூடப்பட்ட பாடசாலைகள் அதிகமாக இருப்பது குறித்து கல்விமான்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு 3லட்சத்து 87 ஆயிரம் ஆக இருந்த முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி எண்ணிக்கை 2002ஆம் ஆண்டு 3லட்சத்து 30ஆயிரமாக வீழ்ச்சி கண்டிருந்தது. 2001ஆம் ஆண்டில் சுமார் 163 பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1முதல் 16ஆகும். 457 பாடசாலைகளில் 17முதல் 30 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 31 முதல் 50 மாணவர்களை 668 பாடசாலைகளும், 51முதல் 75 மாணவர்களை 744 பாடசாலைகளும் கொண்டுள்ளன. இவ்வாறு 100 மாணவர்களுக்குக் குறைந்த எண்ணிக்கையுடைய 2,657 பாடசாலைகளின் நிலை கவலைக்கிடமாகி வருகின்றது. இத்தகைய பாடசாலைகளே பெரும்பாலும் மூடப்பட்டு வருகின்றன.

5முதல் 11வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியை வழங்கவேண்டுமாயின் மாணவர்களின் வாழ்விடங்களுக்கு அருகில் பாடசாலைகள் இருக்க வேண்டியது முக்கியமாகும். அண்மைக்காலங்களில் பாடசாலைகள் மூடப்படுவதற்கு முக்கிய காரணம் இத்தகைய பாடசாலைகளுக்கு செலவிடப்படும் நிதிக்கேற்றவாறு பயன்கிடைப்பதில்லை என கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பிறப்புவீதம் வீழ்ச்சியின் காரணமாக பாடசாலைகளில் அனுமதி பெறும் முதலாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவது மற்றுமொரு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றைவிட, சப்ரகமுவ பாடசாலைகளிலும் இத்தகைய தாக்கம் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்தில் மொத்தமாக 1,261 பாடசாலைகள் இருந்தன. ஆனால், இப்போது 1,204 பாடசாலைகளே இயங்கி வருகின்றன. ஏனைய 57 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இம்மாகாணத்தைப் பொறுத்தவரை, 400 பாடசாலைகளில் நூறுக்கும் குறைவான மாணவர்களே கல்வி பயின்று வருகின்றார்கள். சப்ரகமுவ மாகாணத்தில் மட்டும் 2004ஆம் ஆண்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பாடசாலை அனுமதி விண்ணப்பங்கள் கடந்த வருடங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை விட இரண்டாயிரம் குறைவாகும்.

இம்மாகாணத்தில் குழந்தைகளின் பிறப்பு வீதம் அண்மைக்காலமாகக் குறைந்து வருவதே விண்ணப்பங்கள் குறையக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறே கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களைப் பொறுத்தவரை குழந்தைகள் பிறக்கின்ற வீதம் வெகுவாகக் குறைந்து வருகின்றது. இந்நிலைமை தொடருமாயின் கனிஷ்ட பாடசாலைகள் மூடப்பட வேண்டிய அபாயம் தோன்றக் கூடும்.

கேகாலை மாவட்டத்தில் வருடமொன்றிற்கு 0.9, இரத்தினபுரி மாவட்டத்தில் 12வீதமும், சப்ரகமுவ மாகாணத்தில் 1.8 வீதமுமாகப் பிறப்பு வீதம் காணப்படுகிறது.

பாடசாலை மட்டத்திலும் கல்விச் சமூகத்திலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி வரும் இந்நிலைமை தொடருமாயின் மேற்கூறப்பட்ட கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களிலும், சப்ரகமுவ மாகாணத்திலும் இருக்கின்ற பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

சில பாடசாலைகளில் மாணவர்கள் எவருமின்றி அதிபர், ஆசிரியர்கள் மட்டும் உள்ளனர் என்றும், சில பாடசாலைகளில் அதிபர் மட்டுமே கடமை புரிகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பனம் பொருள் உற்பத்தி கண்காட்சி யாழ். நகரில்!



யாழ்ப்பாணம்,ஒக்.22

பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு பனை அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பனம் பொருள் உற்பத்திக் கண்காட்சி நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். மத்திய கல்லூரியில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள பனம் பொருள் கைப்பணி உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் பொதுமக்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருள்களும் இக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும் மாணவர்களும் இக்கண்காட்சியை பார்வையிட்டனர். (ம-8)

# பனம் உற்பத்திப் பொருள்களை விற்பதில் எழுவைதீவு உற்பத்தியாளர் பெரும் சிரமம்

எழுவைதீவு பனம்பொருள் கைப்பணி உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களையும் செலவீனங்களையும் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இப்பகுதியில் பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் கிளை இயங்கி வந்ததாகவும் சில ஆண்டுகளாக இக்கிளை மூடப்பட்டுள்ளதால் பனை ஓலை உற்பத்தியில் நார்க்கடகம், கடகம், பாய் போன்றவற்றை பொருள்களாக விற்பனை செய்வதில் பல சிரமங்கள் உள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது உற்பத்திப் பொருள்களை யாழ்நகருக்கு எடுத்துவருவதில் பெரும் செலவீனங்கள் ஏற்படுவதாகவும் இதனால் தாம் தகுந்த ஊதியத்தைக்கூடப் பெறமுடியாதுள்ளதாகவும் கூறும் உற்பத்தியாளர்கள் பனை அபிவிருத்திச் சபையின் கொள்வனவு நிலையம் ஒன்று தமது பகுதியில் அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (ம-30)

### சாவகச்சேரி நகரப் பகுதியில்

# உயர் பாதுகாப்பு வலயத்தினால் புனரமைப்பு நிதி திரும்பும் நிலை

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வருடத்துக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து தென்மராட்சியில் இரு புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதியில் உள்ள நகரசபைத் தொழிலாளர் விடுதி அமைந்துள்ள பகுதியில் மலசலகூடம் அமைப்பதற்கும் உதயசூரியன் சனசமூக நிலையப் புனரமைப்புக்கும் என ஒதுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபா நிதியே திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு உரிய இடங்கள் படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளன. இதனால் நிதி ஒதுக்கப்பட்டும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலைமை தொடர்கின்றது.

இந்தப் பகுதியை விடுவித்து அதற்கு அப்பால் பாதுகாப்பு வலயத்தை அமைக்குமாறு நகரசபையினர் உரிய அதிகாரிகளைப் பல தடவைகள் கோரியபோதிலும் படையினர் அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். (ம-117)

### வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நுண்கலைமாணி செல்வன் ஆ.கிருஷ்ணானந்தனின் இன்னிசை, பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை இசை ஆசிரிய ஆலோசகர் செல்வி தம்பு சரோஜா நிகழ்த்துவார்.

### பிந்துனுவெவ வழக்கு எதிரிகளின்

# 'அப்பீல்' மனுவை விசாரணைசெய்ய நீதியரசர்கள் ஐந்து பேர் நியமிப்பு

பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை வழங்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து குற்றவாளிகளும் தமக்கு எதிரான தண்டனையை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கை விசாரிப்பதற்கு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழுவை நீதியரசர் சரத் என்.சில்வா நியமித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் 27 பேரை வெட்டியும், குத்தியும் கோரத்தனமாகக் கொலை செய்தது தொடர்பான வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஐந்து எதிரிகளுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது. கடந்த ஜூலை மாதம் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து தம்மை விடுதலை செய்யக்கோரி பிரதிவாதிகள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரிப்பதற்கு நீதியரசர் சரத் என் சில்வா ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் குழுவொன்றை நியமித்துள்ளார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

5 லாச்சிகள் கொண்ட மேசை, 2 கதிரை, சிறிய கமரா, ரேடியோ என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: பழைய நம்பர் 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலைக்கு அருகில்). (23921)

கே.கே.எஸ். வீதி, உப்புமடப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில சகல வசதிகளுடனும் வீடு, 5 பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 071 234 7564. (23917)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg120. சுத்தம் செய்யப்பட்டது 1Kg 210 தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.94, பருத்தித்துறை வீதி, . கல்வியங்காடு (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காட்டு சந்திக்கும் இடையில்). (23670)

### புறொயிலர் குஞ்சு விற்பனை

Bahiraha இனப் புறொயிலர் குஞ்சும் சிகப்பு நிற தரமான சேவல் குஞ்சும உடன் பெற்றுக்கொள்ளலாம் (சேவல ரூ.8). தொடர்பு:- வி.குணபாகன், 2ஆவது விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (23895)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23926)

### பேட்டுக்குஞ்சு விநியோகம்

பிறிமா சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள 28.10.2003 அன்று விநியோகிக்கப்படும். விலை 60/=. தொடர்பு:- 77, கோயில் வீதி, யாழ். வடமராட்சியில் தொடர்பு:- சிவபாலன், கால்நடை வைத்தியகந்தோர் முன், மந்திகை. (23897)

### மணமகள் தேவை

லண்டனில் நிரந்தரமாக வசிக்கும் சுவாதி நட்சத்திரம் கொண்ட, 28 வயது மணமகனுக்கு பொருத்தமான படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு:- வி.இல.2079, மே/பா உதயன்.(23924)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌவர குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு, அனுசம் நட்சத்திர, சைவபோசன மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சீதனம் உண்டு. தொடர்பு: வி.இல. 2075, மே/பா உதயன். (23737)

### வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P.-2222916.(23933)

### திருமண சேவை

1970, சுவாதி, கி.பா25. அரச உத்தியோக Microscopist மணமகனுக்கு அழகான உத்தியோக மணமகள் தேவை. உள்ளூர், வெளியூர் சகல துறை மணமக்களுக்கு தொடர்பு கொள்க: துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (23841)

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளது திருமண சேவைக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும். த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர் மடம். (23863)

**புதிய ஓடியோ CD வெளியீடு**

அன்பே உன் பாசம்
திருமலை
பிதா மகன்
ஜெய்

**VCD Song**

அலை
புதிய றீஸிங்ஸ்
விவேக் காமடி

அனைத்தும் ஒகன் வீணை CDயில்.

**மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்**
மானிப்பாய்.

## அனுமதிப்பத்திரமின்றி பனை மரம் ஏற்றியோர் பொலீஸாரிடம் சிக்கினர்

தென்மராட்சி,ஒக்.22

வனபரிபாலன திணைக்களத்தின அனுமதிப் பத்திரமின்றி கிளிநொச்சிக்கு பனை மரங்கள், சிலாகைகள் கொண்டு சென்ற வாகனம் கொடிகாமம் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டது.

வாகனத்துடன் மரங்களையும் வாகனத்தின் சாரதியையும் பொலஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

பனை மரங்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் இந்த மரங்களை மரக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்குமாறும் பணித்தார். (எ-117)

## விவசாயிகள் புகார்

தென்மராட்சி,ஒக்.22

நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த விவசாயிகளுக்கென உலக உணவு ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் பலருக்குக் கிடைக்கவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளின் விவசாய சம்மேளனத்தின் ஊடாக இப்பொருள்கள் விநியோகிக்கப்பட்ட போதிலும் விநியோகத்தில் குளறுபடி செய்து இப் பகுதியில் விவசாயம் மேற்கொள்வோருக்கு இவை வழங்கப்படவில்லை எனவும் -

தென்மராட்சி பிரதேச, செயலர் உட்பட இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது.(எ-117)

## கலைவிழா பிற்போடப்பட்டுள்ளது

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் எதிர்வரும் தீபாவளி தினத்தன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடத்தப்படவிருந்த கலைவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் 01.11.2003 சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

(23937) (21-15-19) - நிர்வாகத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



உலக அஞ்சல் தின நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் சிறந்த அஞ்சலராக தெரிவுசெய்யப்பட்ட எமது சக ஊழியர்

**திரு.வீரபாகு மார்க்கண்டேயர்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரது பணி மேன்மேலும் உயர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் அஞ்சல் அலுவலகம். (23925) (21-15-19)

அஞ்சல் அதிபர்களும், சக ஊழியர்களும்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்




**திரு. செல்லையா குகதாசன்**

(ஓய்வுபெற்ற செயலாளர் - வலி. கிழக்கு பிரதேச சபை)

செல்லையா இராசம்மா பெற்றெடுத்த தவப்புதல்வன்
செல்வத்தை சேகரிக்காது சேவை செய்த
தனிப்புதல்வன்.
வல்லமை படைத்த வான்புகழ் வாய்மையாளன்
- வலி. கிழக்கில்
நல்லவை செய்து நின்ற நல்லதோர் தூய்மையாளன்.

இவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்:
வலி.கிழக்கு பிரதேச சபை நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(21-15-19) (23930)




மங்கள நன்னாளாம் இந்நாளிலே மணவாழ்வில் இணையும் குகன் கல்வி நிறுவன அதிபரின் சிரேஷ்ட புத்திரியையும், அவர்தம் மணாளனையும் பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவது:
குகன் கல்விச் சமூகம்,
ஆவரங்கால்.

(23768) Uthayan Graphics

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலக சிரேஷ்ட அஞ்சலரும், அஞ்சலக தொழிற்சங்க யாழ். பிராந்தியச் செயலாளரும், யாழ். மாவட்ட அஞ்சலக விளையாட்டுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய

**திரு.சண்முகராஜா மோகனராஜ்**

அவர்கள் யாழ். மாவட்ட நீதிபதி திரு. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் 20.10.2003 இல் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு மகிழ்வுடன் பாராட்டுவதோடு, மேன்மேலும் சேவை சிறக்க உளமார வாழ்த்துகிறோம்.

மானிப்பாய். (23931) (26-15-19-21) - கணேசு குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகத்தினதும்
ஊரெழு கலைவாணி முன்பள்ளியினதும் வளர்ச்சியில் ஊக்கம்காட்டிய உத்தமர்
மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ

**மா.த.ந. வீரமணி ஐயா**

அவர்களின் பிரிவினால் பரிவிழந்து பரிதவிக்கின்றோம். பாசமுடன் எமை வளர்த்த பிரம்மஸ்ரீக்கு எம் கண்ணீர்க் காணிக்கைகள்.

ஊரெழு. (23932) (26-15-19)

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம்,
ஊரெழு கலைவாணி முன்பள்ளிச் சமூகம்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27 - 03 - 1951
இறப்பு 22 - 10 - 1993

**அமரர் சிவசம்பு சிவபாலன்**

பிரிவுகள் வரும்போது துயரங்களும் வரும் - பழைய
நினைவுகள் வரும்போது என்றும் உம் நினைவுகளே வரும்
ஆண்டுகள் பத்து சென்றாலும் - இன்றும்
ஆறவில்லை எம் துயரம்.

தகவல்:
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (23934) முத்தையா குடும்பம்.
(21-15-19)

## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 - 01 - 1963
மறைவு 24 - 09 - 2003

**அமரர் கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார்**

எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டு விட்டு
எங்கே சென்றுவிட்டீர்கள்? பரிதவிக்கின்றோம் நாமிங்கு
உங்கள் பாசமுகத்தை எங்கு காண்போம்?
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு கொழும்பு இல்லத்தில் உடன் வந்து துயர்பகிர்ந்தவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (22.10.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் வீதி, காளிகோயில் முன்பாக,
மானிப்பாய். (23929) (21-15-19)

- அன்பு மனைவி, பிள்ளைகள்.

# புலிகளுக்கு அரசு எதனையும் தாரைவார்க்கத் தேவையில்லை பொலிஸ், நிர்வாகம் உட்பட அனைத்தும் அவர்களிடம் உள்ளன

## இடதுசாரிகளின் கருத்தரங்கில் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.22

அரசு சமாதானம் பேசிக்கொண்டிருப்பது ஒன்றும் இல்லாத புலிகள் அமைப்புடன் அல்ல. தனியான இராணுவம், பொலிஸ், நீதிமன்றம், நிர்வாகம் என்பவற்றுடன் ஒரு திறமை மிக்க தலைமைத்துவத்தைக் கொண்ட அமைப்புடனேயே அரசு பேசிக்கொண்டிருக்கிறது. ஆகவே புலிகளுக்கு அரசு ஒன்றும் தாரைவார்க்கத் தேவையில்லை. அவர்களிடம் எல்லாம் உள்ளது. சிலர் அறியாமையினால் பிதற்றுகிறார்கள்.

- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இடதுசாரிகளின் கூட்டணி கடந்த சனிக்கிழமை தெஹிவளை ஜயசிங்க மண்டபத்தில் நடத்திய 'சமாதானமா? யுத்தமா?' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடதுசாரிக் கட்சிகள் இணைந்து இனவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு எதிராக இடதுசாரிகளின் கூட்டணியை அமைத்துள்ளன. இந்தக் கூட்டணி நாடுமுழுவதிலும் சமாதானத்தை வலியுறுத்தும் கருத்தரங்குகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய, தெஹிவளை இடதுசாரிகளின் கூட்டணியால் இக்கருத்தரங்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. தெஹிவளை, கல்கிஸ்ஸை முன்னாள் நகரசபை உறுப்பினர் உபாலி பியதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் புதிய இடதுசாரி முன்னணியின் உறுப்பினர் திருநாவுக்கரசு, புதிய ஜனநாயகக் கட்சியின் ஈ.தம்பையா, இலங்கை சமசமாஜக் கட்சி மாற்றுக் குழுவின் சந்திரா குமாரகே, ஒன்றிணைந்த ஜனநாயகக் கட்சியின் மஹிந்த, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் எட்வர்ட் ஆகியோரும் உரையாற்றினர்.

### வாசுதேவ நாணயக்கார

இங்கு வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ரணிலின் ஐ.தே.க. அரசுக்கு முண்டுகொடுக்கிறோம் என்று சிலர் கூறுகிறார்கள் நாம் ஐ.தே.க. அரசுக்கோ அல்லது அரசின் கொள்கைகளுக்கோ ஆதரவாளர்கள் அல்லர். நாம் சமாதானத்திற்கு ஆதரவானவர்கள்; ஒத்துழைப்புக் கொடுப்பவர்கள் - உண்மையில், சமாதானம் என்றால் என்ன? சமாதானத்தின் மூலம் கிடைப்பது என்ன? சமாதானம் என்பது இனங்களிடையே ஒற்றுமை. சமாதானத்தின் மூலம் கிடைப்பது இனங்களின் ஒற்றுமை. இனங்களின் ஒற்றுமை மூலம்தான் நாம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கலாம்; ஏகாதிபத்திய நாடுகள் எமது நாட்டுக்குள் உள்ளிடுவதைத் தடுக்கலாம்; எமது நாட்டு வளங்களை அவர்கள் சுரண்டுவதைத் தடுக்கலாம். இதுதான் உண்மையான சமாதானத்தின் நோக்கம்; இதுதான் சமாதான விரும்பிகளின், சமாதான ஆதரவாளர்களின் அவா.

ஆனால், ஐரோப்பிய நாடுகள் எதிர்த்த நிலையிலும்கூட, ஈராக்கின் மீது அமெரிக்கா யுத்தம் செய்தது சரி என்று பேசிய ரணிலுக்கு - ஈராக் மீது அமெரிக்கா படை எடுத்ததைத் தவிர அப்போது செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று ஐ.நாவில் உரை நிகழ்த்திய ரணிலுக்கு - சமாதானம் தொடர்பான எண்ணம் என்ன? அவரின் நோக்கம் என்ன? அவரின் செயற்பாடு எதனை நோக்கியது?

### ஏகாதிபத்திய ஊடுருவல்

சமாதானம் தொடர்பான அவரின் செயற்பாடுகள் ஏகாதிபத்தியத்தை எமது நாட்டுக்கு உள்வருவதற்கு வழி அமைக்கும் விதமாகவே அமைந்துள்ளன. இதயசுத்தியுடன் மேற்கொள்ளவேண்டிய சமாதான முயற்சியை அமெரிக்க மிலிட்டறிகளின் கரங்களைப் பற்றியபடி ரணில் மேற்கொள்கிறார். முதுகுக்குப் பின் துப்பாக்கியை மறைத்து வைத்துக்கொண்டு சமாதானத்துக்காகப் பிரபாகரனுக்குக் கையசைக்கிறார்.

அமெரிக்க இராணுவக் கப்பல்கள் இங்கு வந்துபோகின்றன. அமைச்சர்களின் ஆலோசகர்களாக அமெரிக்கர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க உளவுப் பிரிவினர் கொழும்பில் பகிரங்கமாகச் செயற்படுகின்றனர். உதாரணமாக, அண்மையில் வெளிநாடு ஒன்றில் நடைபெற்ற மூன்றாம் உலக நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுக்கான மாநாடு ஒன்றில் அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது அமெரிக்க ஆலோசகருடன் சமுகமளித்திருந்தார். மூன்றாம் உலக நாடுகளின் மாநாட்டிற்கு அவர் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி ஒருவரை அழைத்துச்சென்றிருந்தார். அங்கு மூன்றாம் உலகநாடுகளின் விவசாய உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதில்லை என்ற தீர்மானத்திற்கு சீனா, இந்தியா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவிக்க அமைச்சர் ரவி அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இது எமது நாட்டில் ஊடுருவியுள்ள ஏகாதிபத்தியத்தையே எடுத்துக் காட்டுகிறது.

### ரணிலின் நோக்கம்

ஆகவே, ரணிலின் நோக்கம் அமெரிக்க மிலிட்டரியைவைத்து, ஏகாதிபத்தியத்தின் கரங்களைப் பற்றியவாறு வடக்கு, கிழக்கை நசுக்குவது தான்.

சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டு, ஏகாதிபத்தியம் எமக்கு வேண்டாம் என்று கோஷம் எழுப்பும் ஜே.வி.பியைப் பார்த்தால் நகைப்பாக இருக்கின்றது. மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் அமெரிக்க மிலிட்டரி இலங்கைக்கு வரும். ஏகாதிபத்தியவாதிகளின் இரும்புக் கரங்களுக்குள் இலங்கை சிக்கிக்கொள்ளும். எமது நாட்டை அமெரிக்க இரும்புச் சங்கிலி கட்டி இழுத்துக்கொண்டுசென்றுவிடும். அந்த நிலைமை வேண்டுமா?

இதுபோலத்தான் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் ஊடுருவி, அங்குள்ள வளங்களைச் சுரண்டி, இளம் பெண்களை அமெரிக்கா சூறையாடிச் சென்றது. அந்த ஏகாதிபத்திய நிலை எமக்கு வேண்டுமா?

இடதுசாரிகள் என்ற பெயரில் இயங்கும் இனவாதக் கட்சியான ஜே.வி.பி.போன்றவற்றுக்கு மீண்டும் ஒரு யுத்தம் வருவதில் விருப்பம். அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதே ஜே.வி.பியின் நோக்கம். அதேபோல், ஆயுதவியாபாரிகள், யுத்தத்தின் பெயரால் சம்பாதித்தவர்கள் ஆகியோருக்கும் மீண்டும் யுத்தம் வருவது விருப்பம். மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் எதிர்ப்படும் விளைவுகள் மிகமோசமாக அமையும்.

### புலிகள் 'தந்தை'

புலிகள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். தமிழ் மக்கள் புலிகளைத் 'தந்தை'போல் பார்க்கிறார்கள். காரணம், தமிழ் மக்களை ஏனைய தீயசக்திகளிடம் இருந்து போராடிக் காத்து உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றனர் புலிகள். அதேபோல், பிழை செய்யும்போது கடுமையாகத் தண்டிக்கின்றனர்.

தென்னிலங்கையில் சமாதானத்திற்கான எதிர்ப்புகள், பேரணிகள் அதிகரிக்கும்போது புலிகளின் அடக்குமுறைகளையும் தாண்டி மக்களுக்கு அவர்கள்மேல நம்பிக்கை அதிகரிக்கும். காரணம், அவர்கள் இந்த எதிர்ப்பை, பேரணிகளை மக்களிடம் காட்டி - தெற்கில் சமாதானம் தொடர்பாக நல்லெண்ணம் இல்லை. எனவே, உங்களுக்காகப் புலிகளாகிய நாம்தான் இருக்கிறோம் எனப் பிரசாரப்படுத்துவார்கள்.

எனவே, இருதரப்பிலும் மீண்டும் ஒரு யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலே அதிகமாக இருக்கின்றது.

எனவே, இடதுசாரிகளான எமது கடமை என்னவெனில், தெற்கில் சமாதானத்துக்கு ஆதரவான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். ஸ்ரீல.சு.க., ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகள் தலைநகருக்கு ஆர்ப்பாட்டத்திற்கு மக்களை அழைத்து வருகின்றனர். அந்த மக்கள் தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையைப் பார்ப்பதற்கும், கடல் பார்ப்பதற்கும், கொழும்பைப் பார்ப்பதற்கும் இங்கு வருகிறார்கள். அதனை சமாதானத்துக்கு எதிரான மக்கள் அலையென இனவாதிகள் பிரசாரப்படுத்துகின்றார்கள்.

இனவாதிகளுக்கும் இனவாதக் கொள்கைகளுக்கும் எதிரான மக்கள் சக்தியைத் திரட்டவேண்டியது இடதுசாரிகளாகிய எமது பொறுப்பு. இனவாதிகளால் குழம்பிப்போயுள்ள சிங்கள மக்களின் மனங்களைத் தெளிவுபடுத்தி சமாதான ஆதரவாளர்களாக அவர்களை மாற்றவேண்டியது எமது கடமை.

- இவ்வாறு வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ம)

## ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

'யாழ். நவீன சந்தையில் வடிகால் மூடிகள் திருட்டு' என்ற தலைப்பில் கடந்த 20ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி குறித்து யாழ்.மாநகராட்சி ஆணையாளர் பின்வரும் விளக்கத்தை அளித்துள்ளார்.

யாழ். நவீன சந்தையில் வடிகால்களை மூடப்பயன்படுத்தப்பட்ட சிமெந்து மூடிகள் எவையும் திருட்டுப் போகவில்லை. அங்குள்ள வர்த்தகர் ஒருவர் சிமெந்து மூடிகள் இரண்டை தனது தேவைக்காகப் பயன்படுத்தினார்.

இது குறித்து தெரிய வந்ததையடுத்து யாழ்.மாநகராட்சி ஊழியர்களே அந்த இரு சிமெந்து மூடிகளையும் எடுத்து வந்தனர் என்று தெரிவித்தார்.

## 'மனித உரிமைகள் சட்டம்' கருத்தரங்கு:

# நீதியின் கண்களுக்கு அனைவருமே சமம்

### நீதிபதி விளக்கம்

மருதமுனை,ஒக்.22

சட்டத்தின் முன் எல்லோரும் சமமே, ஒருவர் நீதியைத் தேடும்போது நீதிமன்றங்கள் அவர் உயர்ந்தவர் என்றோ தாழ்ந்தவர் என்றோ பார்ப்பதில்லை. எல்லோரையும் சமமாகப் பேணிப் பாதுகாப்பதுதான் நீதிமன்றத்தின், நீதிபதியின் கடமை.

- இவ்வாறு தெரிவித்தார் கல்முனை மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி எம்.பி. முகைதீன்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றமும் இணைந்து நடத்திய 'மனித உரிமைகள் சட்டம்' தொடர்பான கருத்தரங்கில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் ஆராதனை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஏ.எம்.பதுறுதீன் தலைமை தாங்கினார்.

இக்கருத்தரங்கில் நீதிபதி எம்.பி. முகைதீன் மேலும் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

தாழ்த்தப்பட்ட மக்களும், சமுதாயத்தில் குறைந்த நிலையில் மதிக்கப்படும் மனிதர்களும் நீதியை அடைய வேண்டும். அவர்களுக்கும் சட்டம் கைகொடுக்கவேண்டும்.

இந்தக் காரணத்துக்காகத்தான் இலங்கையில் இயங்குகின்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஓர் இயக்கமாக, நிறைவேற்றமாக சட்ட உதவி மன்றங்கள் நாடளாவிய ரீதியிலே அமைக்கப்பட்டு தமமுடைய கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றன.

சாதாரணமாக வருமானமற்ற ஏழை மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டால், அவற்றை எவ்வாறு அடைவது? இதற்குக் கொடுப்பதற்காக கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் இயங்குகின்ற சட்ட உதவி நிறுவனம் காத்துக்கொண்டிருக்கின்றது.

சட்டம் எல்லோருக்கும் தெரிந்திருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றபோதும் அதற்கான வாய்ப்புக்கள் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால், நீதிமன்றங்களில் சரியான சமநிலை பேணுவதில் நீதிபதிகளும் சட்டத்தரணிகளும், பொலிஸாரும் இக்கட்டுகளை எதிர்நோக்குகிறார்கள் - இவ்வாறு கூறினார் அவர்.

இக்கருத்தரங்கில் சட்டத்தரணிகள் ஏ.எம்.பதுறுதீன், யூ.எல்.லியாகத் அலி, எம்.எஸ்.ஜெமீல், எம்.எஸ்.காரியப்பர் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். (ம)

# அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் எமது அரசாங்கத்தை அசைக்க யாராலும் முடியாது

### பாத்ததும்பறையில் பாதுகாப்பு அமைச்சர் சூளுரை

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 'வல மான் வேஹ'வாகத்தான் அமையும். இதன் அடிப்படையில், பிரதமர் ரணில்தான் நாட்டை 12 ஆண்டுகளுக்கு ஆளப்போகிறார். அவரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் ஆவார். நாடாளுமன்றத்திலும் எமது பலமே. எனவே இந்த அரசை வீழ்த்த எத்தனிப்பது வெறும் கனவு மாத்திரமே.

பாத்ததும்பறைத் தொகுதியைச் சேர்ந்த மீகமன கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கடந்த 19 ஆம் திகதி உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இப்படிக் கூறினார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் இணைந்து வத்தேகம பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை மீளாய்வு செய்வதில் ஈடுபட்ட பின்னர் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நாடு ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையை பலர் மறந்துவிட்டனர். பொருளாதாரம், கலாசாரம், சமூகம் உட்பட சகல அபிவிருத்திகளையும் ஒன்றரை வருட காலத்துக்குள் பேணி நாட்டை யுத்த அழிவில் இருந்து அரசு காப்பாற்றியுள்ளது. அதன் பலனை இன்று நாம் காண்கிறோம்.

எம்மீது பிடித்திருந்த சனியன் தொலைந்து விட்டது. இப்பொழுது சுபகாலம் பிறந்திருக்கிறது. அரசாங்கத்தின் கால்களைப் பிடித்துக்கொண்டிருந்த வேலைநிறுத்தம், ஜனகோஷம் எல்லாமே பிசுபிசுத்துவிட்டன. எமக்கு எதிரான அனைத்து போராட்டங்களும் எம்மை வலிமை கொள்ளச் செய்துவிட்டன. போர்நிறுத்தம் காரணமாக நாடு அடைந்துள்ள அபிவிருத்தியைக் கண்டு எதிரணியினர் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர்.

புலிகளுடன் மீண்டும் மீண்டும் குழப்பங்களை எமக்கு ஏற்படுத்திக் கொள்ள இயலாது. அவ்வாறு குழப்பங்கள் மூண்டால் நாம் மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தள்ளப்படுவோம்.

எனவே, இன்னும் கொஞ்ச நாள்களுக்கு நாம் எல்லோரும் பொறுமை காக்கவேண்டும். நாடெங்கும் பொய்ப் பிரசாரம் வேகமாகப் பரவுகிறது. நீங்கள் ஏமாறவேண்டாம்.

புலிகளின் படைகளை விடவும் எமது படை சக்தி வாய்ந்தது. 15,000 பேருக்கு மேல் புலிகளிடம் படையினர் இல்லை. எம்மிடமோ இரண்டு லட்சம் யுத்த சிப்பாய்கள் முப்படைகளிலும் இருக்கின்றனர். இதற்கு மத்தியில்தான் நமது அரசியல் எதிரிகள் வெறும் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் துரித புனர்வாழ்வுத் திட்டம்

### பிரதமரின் பணிப்பையடுத்து நடைமுறை

போரினால் சின்னாபின்னமான வடக்கு - கிழக்கு பிரதேசத்தைத் துரிதகதியில் மீளக்கட்டியெழுப்ப பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் துரித புனர்வாழ்வுத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின பிரகாரம் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 15 அபிவிருத்தித் திட்டங்களின் முதற்கட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

முல்லைத்தீவு, மாங்குளம்வேளாங்குளம் வீதியைப் புனரமைக்க முதற்கட்டமாக 5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக ஒரு கோடி 50 லட்ச ரூபா செலவு ஒதுக்கீடு செய்யப்படவிருக்கிறது.

மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் நடைமுறையிலிருக்கும் நீர்ப்பாசனத் திட்டத் திருத்தவேலைகள் யாவும் 2004 ஜூன் மாதம் பூர்த்தியாகும். மன்னாரில் நெல் களஞ்சியத் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நீர்பாசனத் திட்டங்கள் வவுனியா கல்மடுவிலும், மட்டக்களப்பு மியான் குளத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நான்கு ஐஸ் தொழிற்சாலைகள் திருக்கோவில், சாய்ந்தமருது, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன. கிளிநொச்சியில் பால் பதனிட்டுக் குளிரவைத்து பாதுகாக்கும் இடமொன்றும் அமைக்கப்படவுள்ளது. (ம)

# செய்திக்கொத்து

### கட்டடத்துக்கு அடிக்கல்

சாவகச்சேரி,ஒக்.22

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

சுகாதார சேவைகள் மாகாண பதில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் அடிக்கல் நட்டு வைத்தார். (ம-10-31)

### நூலக கட்டடங்கள்

தென்மராட்சி,ஒக்.22

உலக வங்கியின் நிதியுதவியுடன் தென்மராட்சி கல்வி வலயத்தில் இரு பாடசாலைகளுக்கு நூலகக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் ஆகியவற்றிலேயே அமைக்கப்படவுள்ளன. (ம-10-117)

### தளபாட அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு,ஒக்.22

'நிக்கொட்' நிறுவனத்தினால் மருதங்கேணி பிரதேசத்தில் உள்ள 10 பாடசாலைகளுக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால இடப்பெயர்வின் பின்னர் மீளச் செயற்படத் தொடங்கியுள்ள பாடசாலைகளுக்கே இவை வழங்கப்பட்டன. (ம-10-182)

### மாணவர்களுக்கு மதியஉணவு

வடமராட்சி கிழக்கு,ஒக்.22

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் மருதங்கேணி கோட்டத்தில் உள்ள 10 பாடசாலைகளின் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி வருகிறது.

தரம்-2 தொடக்கம் 5 வரையும் விசேட கல்வித் திட்டத்தின் கீழ் மாலை நேர வகுப்புக்களில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கே இந்த மதிய உணவு வழங்கப்படுகிறது. (ம-10-182)

### கண்ணி வெடி செயலிழக்கச் செய்யப்பட்டது

மண்டைதீவு,ஒக்.22

மண்டைதீவு கிழக்குப் பகுதியில் உள்ள தோட்டக் காணியில கிளைமோர் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

முதலாம் வட்டாரத்தில் கடற்கரை வதிக்கு அருகேயுள்ள தோட்டக் காணியிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது. (ம-10-88)

### விவசாய உள்ளீடு வழங்கல்

தென்மராட்சி,ஒக்.22

உலக உணவு ஸ்தாபனத்தினால பளைப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு விதை நெல் மற்றும் உர வகைகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

கிளாலி, முகமாலை மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்கே இவை வழங்கப்பட்டன (ம-10-117)

### விசர்நாய்க் கடிக்கு 6 பேர் இலக்காகினர்

தென்மராட்சி,ஒக்.22

கடந்த வாரத்தில் தொடர்ச்சியாக இருதினங்கள் விசர்நாய்களின் கடிக்கு இலக்கான அறுவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கைதடி தெற்கைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர், கைதடி நுணாவிலைச் சேர்ந்த தாயும் மகளும், தாவளை இயற்றாலையைச் சேர்ந்த ஒருவர், கச்சாய் தெற்கைச் சேர்ந்த ஒருவர் என இந்த அறுவருமே விசர்நாய்களின் கடிக்கு இலக்காகியுள்ளனர். (ம-10-117)

### திருட்டு

தென்மராட்சி,ஒக்.22

மட்டுவில் சந்திப் பகுதியிலுள்ள கடையொன்றில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-10-117)

### இளைப்பாறு மண்டபம்

தென்மராட்சி,ஒக்.22

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதியுதவியுடன் கடற்றொழிலாளர்களுக்கான இளைப்பாறும் மண்டபம் ஒன்று புலோப்பளை இறங்குதுறையில் அமைக்கப்பட்டுவருகிறது. (ம-10-117)

---

ஒக்ரோபர் மாதம் யாழ். நகரில் சத்தியவசன வானொலி இசைக் கலைஞர்களின்

**இசைமலர் நற்செய்தி இன்னிசை மாலை**

4.00 மணிக்கு

உடுவில் — 23ஆம் திகதி (வியாழன்) மல்வம், புனித பவுல் CSI ஆலயம், சத்தியபுரம்

நல்லூர் — 24ஆம் திகதி (வெள்ளி) பரியாக்கோபு ஆலயம் (முத்திரை சந்தி அருகில்)

சுண்டுக்குளி — 25ஆம் திகதி (சனி) சுண்டுக்குளி மகளிர் பாடசாலை மண்டபம்

பருத்தித்துறை — 26ஆம் திகதி (ஞாயிறு) மெதடிஸ்த திருஅவை மண்டபம்

மேலதிக விவரங்களுக்கு: 0777 766 227

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/30952) (26-12-13)

---

**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை**

**தரம்-6 அனுமதி-2004**

விண்ணப்ப முடிவு திகதி : 21.11.2003

விண்ணப்பப்படிவத்தினைப் பாடசாலை நேரத்தில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(23942) (29-12-13) — அதிபர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி மோகனராணி பாலச்சந்திரன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லப்பா இராமலிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், சாவகச்சேரி. (23943)(12-13) — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர் திரு.இராசையா இராசசேகரம்

அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கை ஆக்குவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்,
நீர்வேலி.

(23945) (29-12-13)

---

தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு

**விசேட சலுகை**

இன்று முதல்

வனிதையரை வசீகரிக்கும்
தரமான கொட்டன் சாறிகள், சல்வார் கமீஸ்கள்
5% முதல் 10% வரை சிறப்புத்தள்ளுபடியில்...!

**கலாஞ்சலி சாரீஸ்**

169, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில்)

---

## 10ஆம் ஆண்டு நினைவினில்



தாயின் மடியில் 28 11 1963

தாயக மண்ணில் 11 11 1993

தென்மராட்சி கோட்ட சிறப்புத் தளபதி

**லெப்டினன்ட் கேணல் குணா**

(சுந்தரம் விஜயராஜா)

மலையென எழுந்தவன் பகைதனை வென்றவன்.
தலைவனின் வழி என்றவன் தரணியில் தளபதி என நின்றவன்.
அலைகடல் தாவியே பகை முகாம் புகுந்தவன்.
விலையது கொடுத்திவன் தவளை வெற்றிக்கு முதல் வித்தானவன்.

இள வயதில் புலியாகி இன் தமிழின் துயர் களைந்த தளபதியே! தங்க நிகர் இளமதியே!
உளமதிலே குணாவென்று நான் துதித்த கொள்கை பெரும் சுடரே!
காணாமல் தவிக்கின்றேன் பார்!

யாழ்ப்பாணம். (23944) (12-13) — உன் உறவு.

---

**இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம்**

S.G. சாந்தன் முதன்முதலாக 'ராகம்ஸ்' இசைக் குழுவினருடன் இணைந்து வழங்கும்

**மாபெரும் நட்சத்திர இரவு**

இன்னிசை நிகழ்வு

இடம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.

காலம்: 24.10.2003 வெள்ளி (தீபாவளி தினம்) மாலை 6.30.

அனைவரும் திரண்டு வருக! ஆனந்தம் பெறுக!

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விசேடமான அனுசரணை:

அறிவியல் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வாசிப்புத்துறையில் ஒரு வழிகாட்டி!

அருள் கல்வி நிலையம் A.T.C. இணுவில்.

லிங்கம் கொமினிக்கேசன் — ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில். T.P: 222-5942

எவரெஸ்ட் கல்வி நிலையம் இணுவில்.

கோண்டாவில் கல்வி நிலையம் K.T.C. ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

நிரு கல்வி நிலையம் கோண்டாவில்.

NEW SCIENCE HALL KANNATHIDDY, JAFFNA.

வினோத் போன் சொப் — VINOTH PHONE SHOP — K.K.S. வீதி, கோண்டாவில் கிழக்கு.

BRIGHTMAN TUITION CENTRE Brown Road, Jaffna.

(சி-30954)(12-13)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**22-10-2003**



ஜெயக்குமார் ரஞ்சினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

**லக்ஷாயினி**

அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (22-10-2003) புதன் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*சிவன் புது வீதி,*
*நல்லூர்.* (C/30959) (29-12-18) அப்பா, அம்மா.


## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை





உங்களுக்காகவே விசேடமாகத்
தருவிக்கப்பட்ட நவீன பாணியிலான
ஆடைத்தினுசுகள்
அனைத்தையும்
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
நாடுங்கள்:

புதிய **ராசி சில்க்ஸ்** **நல்லி சில்க்ஸ்**

70,71,A நவீன சந்தை,
(உட்புறம்),
யாழ்ப்பாணம்.
☎ 021 222 5571

121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 5573

(C/30953) (29-18)




சங்கானை காளி அம்பாள் தேவஸ்தானம் நடத்தும்

### இலவச கண்பரிசோதனை முகாம்

"உங்கள் கண்களை நாம் காப்போம்"

இடம் : சங்கானை காளி அம்பாள் தேவஸ்தானம்
காலம் : 23-10-2003 வியாழக்கிழமை
காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி

- கொழும்பில் இருந்து வருகைதந்த வைத்திய நிபுணர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
- மிகப் பெறுமதியான கண்ணாடிகளை 750/= இற்கு பெற்றுக்கொள்ளலாம்.

(23957) (29-12-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சங்கீத ஆசிரியை
திருமதி பு.ஜெகதீஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தையார் **கலியாண சுந்தரக்குருக்கள்**
அவர்களது மறைவையொட்டி
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

*கரவெட்டி.* கல்லூரிச் சமூகம்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (C/30958) (29-18)

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

மண்ணின் மடியில் — திருமதி — இறைவனின் அடியில்

19-09-1932 **பூரணம் ஆறுமுகம்** 8-10-2003

துடிப்புக்களை இழந்த ஓடங்களாய்
உங்கள் நினைவுகளில் நாம்
விழிநீர் சொரிகின்றோம.

எமது அன்பு அன்னையார் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வகையிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (23.10.2003) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கரணவாய் மத்தி,*
*நவிண்டில்,*
*கரவெட்டி.* (C-30956) (29-18)

ஆறுமுகம் (கணவர்-கிளாக்கர்),
பிரபா, இரவீந்திரன், சபேசன்
(மக்கள்).

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

விபுலானந்தன் ஞாபகார்த்த பாடசாலை அணிகளுக்கிடையேயான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் யாழ். மத்திய கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

பிற்பகல் 4 மணி - யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணி எதிர் யாழ். இந்துக் கல்லூரி.

மாலை 5 மணி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (ஒ-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் இன்று புதன்கிழமை பிற்பல் 2.15 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் 14 வயது, 16 வயது, 18 வயது மற்றும் 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகள் விளையாடவுள்ளன. (9-51)


### விற்பனைக்கு

26 சீறி B.M.C. லொறி
சகல ஆவணங்களுடனும்
மிகக்குறைந்த விலையில்
விற்பனைக்குண்டு.
906,K.K.S. வீதி,
நாச்சிமார்கோயிலடி. (23952) (12)

### சாரதி தேவை

கார், முச்சக்கர வண்டி
செலுத்தக் தகுதியானவர்களை
எதிர்பார்க்கின்றோம்.
சாரதி அனுமதிப்பத்திரம்
உள்ளோர்க்கு முன்னுரிமை.
சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: மோகன்
122/1, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:077-6085658 (23958) (12)

### நாகம்ஸ் சுன்னாகம்

20 முதல் 23 வரை
மாதவன், கீது (அறிமுகம்), ஸ்ருதிகா நடித்த
**நள தமயந்தி**
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)

தீபாவளி வெளியீடு:
24 முதல்
இந்தியாவிலும்,
இலங்கையிலும்
ஒரே தினத்தில்
இளைய தளபதி
விஜய், ஜோதிகா,
விரண் நடித்த



T.P.: 021-222 2917
T.P.: 060 221 2779

### ராஜா யாழ்ப்பாணம்

எம்.ஜீ.ஆர், சரோஜாதேவி
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
24 முதல் **திருமலை**

### லிபேட்டி அச்சுவேலி

ரஜனி, மீனா, கவுண்டமணி,
செந்தில் நடித்த
**எஜமான்**
காட்சி நேரம்: 3.00, 7.00 (பு.நே.)
எமது தீபாவளி வெளியீடாக
சேரன், ரதி நடித்த
**சொல்ல மறந்த கதை**

### லஷ்சுமி சினிமா இணுவில்

அஜித், லைலா, நக்மா நடித்த
**தீனா**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
தீபாவளி வெளியீடு:
சரத்குமாரின் **திவான்** (C30943)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயராணி கந்தசாமி

கலைநகர், வட்டு.வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தசாமி (சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியார் விஜயராணி (மைனா) 19.10.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புலவர் வித்துவான் வே.அருளம்பலம் தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சவேலுப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகளும் கலைமதி (கனடா), கலைமொழி, கலைஎழில், கலைஅரசி (பிரான்ஸ்), முரளி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கு.தோத்திரலிங்கம் (கனடா), மு.தனபாலசிங்கம் (அரசினர் வைத்தியசாலை காரைநகர்), பூ.ஸ்ரீசாந்தரூபன் (பிறவுன் அன் கம்பனி யாழ்ப்பாணம்), க.உமைபாலன் (பிரான்ஸ்), மு.சுசீந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வே.ஜயரத்துரை (லண்டன்), வே.செல்வநாயகம் (வவுனியா), திருமதி ரஞ்சிதகமலானந்தம் - நவரத்தினம், காலஞ்சென்றவர்களான திருமதி சரஸ்வதிஅம்மா - பாலசிங்கநாயகம், திருமதி அன்னலட்சுமி கனகரத்தினம், திருமதி புனிதபுஸ்பம் - சிவநாதன் ஆகியோரின் மைத்துனியும் அகந்தசாமி, அகனகதம்பிராசா, அசிவசுப்பிரமணியம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான அ.இராசகோபால், அ.சிவநாதன் ஆகியோரின் சகோதரியும் தோ.யோகதர்சன், தோடிலேஸ், தோ. யுகனி (கனடா), த.அபர்நா, த.யுசந்தா, சாதுசிகா, உ.காருணியன், உ.யாதவன், உ.கிருத்திகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வீட்டுக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*கலைக்கோட்டம்,*
*கலைநகர், சித்தன்கேணி.* (23950) (29-12-18)

தகவல்:
க.முரளி (மகன்)

## திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா

விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா அவர்கள் நேற்று (21.10.2003) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் கந்தசாமி, தவமணி அவர்களின் தாயாரும் கார்த்திகேசு, நகுலாதேவி ஆகியோரின் மாமியாரும் செந்தில்செல்வன் (சுகாதாரப் பிரிவு சாரதி, மானிப்பாய்), செந்தில்குமார் (லண்டன்), சசிகலா (கல்வியியற்கல்லூரி, வவுனியா), உதயகலா (கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), செந்தூரன் (டென்மார்க்), செந்தா (டென்மார்க்), பிருந்தா, துவாரகன், கஸ்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை காலை 11.00 மணிக்கு விடத்தற்பளையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விடத்தற்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.* (23953) (29-12-18)

தகவல்:
வே.கந்தசாமி (வெள்ளை - மகன்)

## சிவப்பிரகாசம் சச்சிதானந்தம்

கோப்பாய் கலட்டி, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 33 வருடங்களாக (1998 ஆம் ஆண்டுவரை), 'L' Block, Govt.Flats, பம்பலப்பிட்டியில் வசித்துவந்தவருமான சிவப்பிரகாசம் சச்சிதானந்தம் அவர்கள் (ஓய்வுபெற்ற செயலாளர், சுகாதாரத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை) 20.10.2003 திங்கட்கிழமை ஹமில்டன், நியூஸிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் Dr.ஸ்ரீகாந்தா (பேராசிரியர், கியோட்டோ பல்கலைக்கழகம், ஜப்பான்), காஞ்சனா (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் வீணா, மிதுனா, டக்ஷனா, சச்சிகோ, சங்கீதா ஆகியோரின் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பத்மநாதன், மங்கயர்க்கரசி, வைகுந்தநாதன், சுவேந்திரநாதன் ஆகியோரின் இளைய சகோதரரும் Dr.P. சோதீஸ்சன் (நியூஸிலாந்து), சகீ (ஜப்பான்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை No. 1, Sen Wick Crecent Hill Crest, Hamilton, Newzeland இல் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 121, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 5365 (23954) (29-12-18)

தகவல்:
இ.ஸ்ரீஸ்கந்தராஜா (பெறாமகன்)

## செல்வி ராதா சோமசுந்தரம்

(முன்னாள் அதிபர், கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி)

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும், சிவகுருநாதர் வீதி, திராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ராதா சோமசுந்தரம் அவர்கள் 20.10.2003 திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (தபாலதிபர் - மலேஷியா, பென்சனியர்) - ஜெயலஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சோமசன்மா லலிதா, சீதா (மலேஷியா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தங்கபூரணம் காலஞ்சென்ற தங்கராசா, காலஞ்சென்ற தேவதாசன் ஆகியோரின் மைத்துனியும் சிறீகரன் (கனடா) அவர்களின் அத்தையும், டாக்டர் பிரகாஷ் (மலேஷியா), ரூபன் ராஜ்குமார் (மலேஷியா) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் கிசோக், கிபித்தா, ஜெயன், ஷேரான், சரா, ஜெயராதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 29, சிவகுருநாதர் வீதி,*
*திராவியடி,*
*யாழ்ப்பாணம்.* (23948) (29-12-18)

தகவல்:
லலிதா தங்கராசா, சீதா தேவதாசன்
(சகோதரிகள்)

## திருமதி இராசையா மனோன்மணி

காரைநகர், அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது குளப்பிட்டிச் சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா மனோன்மணி 20.10.2003 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் சின்னம்மா, காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், சங்கரப்பிள்ளை, சோமசுந்தரம், சின்னத்தம்பி, சடாசிவம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2003) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் உள்ள*
*தேவாலயத்திற்கு முன் உள்ள*
*முதலி கோவில் ஒழுங்கை, கொக்குவில்.*

தகவல்:
மா.புவனேஸ்வரன்
(பெறாமகன்)

(C/30961) (29-12-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரத்தினம் சிவஞானசுந்தரி

உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசரத்தினம் சிவஞான சுந்தரி நேற்று (21.10.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கலாவதி (ஆசிரியை, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), தயாபரன் (நகர அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறிகாந்தா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சரவணமுத்து, திருமதி விநாயகமூர்த்தி, சிவலோகம், தெய்வானைப்பிள்ளை, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற குமாரசுவாமி, திருமதி யோகரத்தினம் சிவபாக்கியம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சிறிதரன் (அமெரிக்கா) அவர்களின் மாமியாரும் உசன் டாக்டர் மாணிக்கம் அவர்களின் சிறிய தாயாரும் துஷானி, சங்கீத், சரன், விதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் கலைச்செல்வி, திருச்செல்வி, தவச்செல்வி ஆகியோரின் பெரிய தாயாரும் இரத்தினம் லலிதாவின் வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2003) புதன்கிழமை பிற்பகல் 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உசன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,*
*மிருசுவில்* (23959) (29-12)

தகவல்:
ச.இராசரத்தினம் (கணவர்).

## திருமதி தயாளபூபதி பொன்னுத்துரை (பேபி)

காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுண்டுக்குளியில் வசித்தவருமாகிய திருமதி தயாளபூபதி பொன்னுத்துரை நேற்று (21.10.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அருளம்பலம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் இன்பமணி, இன்பநாளினி காலஞ்சென்ற ஜெபநேசன், ஜெபராஜன் (லண்டன்), ஜெபரஞ்சன் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகநாதன் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), யோகரட்ணம் (கனடா), நிமலினி (லண்டன்), மகாலட்சுமி ஆகியோரின் அன்புமாமியு அனோஷியா, அஜந்தன், ஜெனிற்றா, அஜிறறா, டில்ஷான், நிஷாந்தன், நிரோஜன், நிருபிக்கா, நிலக்ஷன், துஷிக்கா, துஷியந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (22.10.2003) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இல. 39, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் நடைபெற்று, பூதவுடல் பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 39, கொழும்புத்துறை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (23959) (29-12)

தகவல்:
பொ.ஜெபரஞ்சன் (மகன்)

## தன்னிச்சையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா சந்தேக நபருக்கு உத்தரவிட்டார்.

எனினும் தான், அவ்வாறான வாக்கு மூலம் எதையும் அளிக்க விரும்பவில்லையென சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து இவரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-8)

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கோ பைகாலா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் நடந்த இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலை குறித்து ஆராயப்பட்டது.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் உருவாகும் வரை காத்திருக்காது அபிவிருத்திப்பணிகளை முன்பே ஆரம்பிக்க வேண்டும். மக்களுக்கு அவசர புனர்வாழ்வுப் பணிகள் தேவையாக உள்ளன என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

தற்போதைய சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள அரசும் விடுதலைப் புலிகளும் உறுதி பூண்டுகொள்ள வேண்டும். பேச்சுமூலம் மட்டுமே சமாதானம் ஏற்படும் என்று உறுதிப்பாடு இருதரப்பினர் மத்தியிலும் உருவாகவேண்டும்.

சமாதான முயற்சிகள் தொடரும் போது, பின்லாந்து கூடுதல் நிதியை வழங்கத் தயாராகவிருக்கின்றது.

- இவ்வாறு பின்லாந்து வெளிவிவகார அமைச்சின் ஆசியப் பிராந்தியத் தூதர் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

(ஒ-3-5)

## பார்த்தீபன் மறைவுக்கு 'நிதர்சனம்' அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.22

நாயன்மார்கட்டைச் சேர்ந்த பரராஜசேகரம் பார்த்தீபனின் மரணத்துக்கு நிதர்சனம் நிறுவன யாழ். மாவட்டப் பிரிவு அனுதாபம் தெரிவித்துள்ளது.

பார்த்தீபனின் மரணம் தொடர்பாக அந்தப்பிரிவினர் விடுத்துள்ள அஞ்சலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பார்த்தீபனின் அகாலமரணம் எமக்கு பேரதிர்ச்சியைத் தந்தது. எமது நிறுவனத்தின் பல செயற்பாடுகளுக்கு பக்கத்துணையாகவும், பலமாகவும் ஒத்துழைத்த இவரின் பிரிவுக்கு நிதர்சனம் நிறுவனம் அஞ்சலி செய்கின்றது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள சமாதான முயற்சிகள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகள் சமர்ப்பிக்கவுள்ள வரைவு நியாயமானதாக இருக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது.

வடக்கு - கிழக்கில் ஏற்படும் இடைக்கால ஒப்பந்தம் எதுவானாலும் இறுதி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகவே அது அமைய வேண்டும்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி வழங்கும் வகையில் இருநாடுகளுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஆராயவும் முடிவு செய்யப்பட்டது இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

## தெற்கில் ஒளிந்துள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பலாலி தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த கேணல் அஸ்விஸ், யாழ். மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் விதாரனே, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் லயனல் ஜெயசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊடகவியலாளர்கள் சார்பில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி, செயலாளர் க.சதீஷ், பொருளாளர் எஸ். திருச்செல்வம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் இ.தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் தலைமை இணைப்பாளர் கரினா எரிக்ஷன் மற்றும் மறிலீஸ பேர்க்சென் ஆகியோர் பங்குபற்றினர்.

அங்கு கருத்து வெளியிட்ட வட பகுதி கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா, ஊடகவியலாளர் நிமலராஜன படுகொலை குறித்துச் கூறியதாவது:-

நிமலராஜன் படுகொலைக்கும், படையினருக்கும் எந்த தொடர்புமில்லை.

அரசியல் கருத்து வேறுபாடுகளே இக்கொலைக்குக் காரணம். எமக்குக் கிடைத்த அறிக்கைகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இதனைக் கூறுகின்றேன்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களின் உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.

தென்னிலங்கையில் ஒளிந்திருக்கும் சில கரங்களின் (Hidden Hand) பின்னணி இக்கொலையுடன் தொடர்புபட்டுள்ளது.

ஒரு தமிழ் கட்சிக்கு இக்கொலையுடன் தொடர்பு இருக்கலாம். ஆனால் இந்தக் கட்சிதான் கொலைக்குக் காரணம் என்று எம்மால் விரல் நீட்டிக்காட்ட முடியாது. பல கட்சிகள் உள்ளன. சில அரசியல் கட்சிகள் சில ஆயுதபாணிகளான போராளிகளையும், வேறு சில ஆயுதம் தாங்காத உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. அவற்றில் ஒன்றே இக்கொலையைச் செய்திருக்கலாம்.

ஆட்சியில் இருந்த அரசோ அல்லது ஆட்சியிலிருக்கும் அரசோ இக்கொலை தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்குமாயின், அதற்காக அக்குற்றவாளியைப் படைத்தரப்பு பாதுகாக்கின்றது என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. அது தவறு.

எந்தக் கட்சியோ, இயக்கமோ அதிகாரத்தைத் தன்பாட்டில் கையில் எடுத்துச் செயற்படுவதற்கு நாங்கள் எதிரானவர்கள். அது குறித்து நாம் விழிப்பாக இருப்போம்.

- இப்படி அவர் கூறினார்.


**வடமராட்சி, யாழ், - கொழும்பு பயணிகள் வான் சேவை**

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவுசெய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=

ஜெயா ட்ரான்ஸ்போர்ட் & கொமினிகேசன்

JEYA COMMUNICATION COLOMBO-13

**தீபாவளி மலிவு விற்பனை**
22.10.2003 தொடக்கம்
25.10.2003 வரை

- பழைய,புதிய ஓடியோ CD - 75/= தொடக்கம்
- பழைய,புதிய வீடியோ CD - 90/= தொடக்கம்
- பழைய,புதிய MP-3 95/= தொடக்கம்
- Rammy Audio CD- 180/= தொடக்கம்

பிளாஷ் CD ஹவுஸ்
640, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

மின் காந்தத் தூண்டல்
WED. FRI. 6.00-7.00(p.m.)
ஆரம்பம்: 22-10-2003 [இன்று]

சுழற்சியியக்கம்
SAT,SUN. 8.00 - 9.00
ஆரம்பம்: 25-10-2003

By:M.கருணாநிதி

பொதுவான களைகள், வேர்த்தண்டுக் கிழங்குள்ள களைகளை சிறப்பாக கட்டுப்படுத்த

FINCHEM AGRO DIVISION



டிஸ்ட்ரோய்

பிரீன்கெம்


பீ.ஏ.எஸ்.எவ்.பிரீன்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு- 02

மேட்டு சேற்று நில விவசாயத்தை – காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்



EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...



யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 074 512666, 360290/1
E-mail:jaffna@expoavi.com



இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.